


24.01.2025 - வெள்ளிக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 77 குரோதி வருடம் தை மாதம் 11 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 24 பக்கங்கள் - 12

## மாவிலாறு திறப்பு: வெள்ளத்தில் மூழ்கியது வெருகல்

( செய்தி 2ஆம் பக்கம் )







# பொலிஸ் காவலில் இருந்த தமிழ்ப் பெண் உயிரிழப்பு




## தற்கொலை என்கிறது மருதானை பொலிஸ்; துரித விசாரணைக்கு அரசு உத்தரவு

(கனுஷியா புஷ்பகுமார்)

மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் இருந்த பெண் தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்துள்ளமை பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பொன்னையா கலாதர்ஷனி எனும் இரு பிள்ளைகளின் தாயார் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் குறித்த வழக்கு தொடர்பில் அவர் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் நீதிமன்றம் குறித்த பெண்ணுக்கு பிடியாணை ஒன்றை பிறப்பித்திருந்தது. அதன்படி, பொலிஸார் 21ஆம் திகதி இரவு 8.45க்கு மருதானை பிரதேசத்தில் வைத்து குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

இந்நிலையிலேயே, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த பெண் 22ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பெண் தான் அணிந்திருந்த நீண்டகாற்சட்டையை தற்கொலைக்கு பயன்படுத்தியுள்ளதாக பொலிஸ் (தொடர்ச்சி...) 02

## உடன் விசாரணை வேண்டும்:ஸ்ரீதரன்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



கிளிநொச்சி, திருவையாறு பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயாரான 32 வயது பெண் ஒருவர் கொழும்பு மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் இருந்தபோது மரணித்துள்ள சம்பவம் தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளதுடன், பொலிஸ் நிலையத்தில் எவ்வாறு குறித்த பெண் தற்கொலை செய்து (தொடர்ச்சி...) 02

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

( எஸ்.டொரின் )

தரம் 5 மாணவர்களுக்கு கடந்த செப்டம்பர் மாதம் 15ஆம்திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று (23) வெளியாகியது.இந்த பரீட்சையில் (தொடர்ச்சி.) 02







## வெட்கம் இருந்தால் வெளியேறுங்கள்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

மக்களின்வரிப்பணத்தில்அரசவீடுகளில் வசிக்கும் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் வெட்கம் இருந்தால் குறித்த வீடுகளில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், மஹிந்த ராஜபக்சவின் மாளிகையை காப்பாற்ற எதிர்க்கட்சி (தொடாசி.) 02

## புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026 முதல் அமுல்



பாடத்திட்டம் மற்றும் பரீட்சை முறைமை உள்ளிட்ட புதிய கல்வி சீர்திருத்தங்கள் 2026 முதல் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் இதனை குறிப்பிட்டார். முந்தைய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கல்வி சீர்திருத்த திட்டங்களில், நேர்மறையான மாற்றங்களைச் (தொடர்ச்சி...) 02

## அர்ச்சுனாவின் நேர ஒதுக்கீடு : சபையில் சூடுபிடித்த வாதம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஆளும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் எழுந்தன.

64 நாட்களாக நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தும் தமக்கான நேரத்தை ஒதுக்கீடு செய்துதர ஆளுங்கட்சி நடவடிக்கையெடுக்கவில்லை என அர்ச்சுனா எம்.பி குற்றச்சாட்டுகளை சுமத்தியதுடன், தம்மீது கடந்த இரண்டு மாதத்தில் 24 வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தினார்.

அரசாங்கத்துக்கு எதிர்காலத்தில் எவ்வித ஆதரவையும் வழங்கப்போவதில்லை என கூறிய (தொடர்ச்சி...) 02

## 75 நாளில் ட்ரம்ப் செய்யாததை 63 நாட்களில் செய்தார் அநுர



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனாட்ல் டிரம்ப் 75 நாட்களில் செய்யாத பல விடயங்களை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 63 நாட்களில் செய்துள்ளார். இதனை இலங்கையர்களாக வரவேற்ற அனைவரும் தமது காழ்ப்புணர்ச்சியை கைவிட வேண்டும் என சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். (தொடர்ச்சி...) 02

## அநுர யாப்பாவுக்கும் மனைவிக்கும் பிணை



குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு (தொடர்ச்சி...) 02

## கிளிநொச்சியில் வெள்ளம்: கடும் பாதிப்பில் மக்கள்

(கனுஷியா புஷ்பகுமார்)

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது முறையாகவும் நேற்று திறக்கப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மக்கள் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இரணைமடுக் குளத்தின் வான் (தொடர்ச்சி...) 02







## சாணக்கியனுக்கு ரூ.50,000 வழங்குமாறு பிள்ளையானுக்கு நீதிமன்றம் உத்தரவு



வழக்கொன்றை தாக்கல் செய்த பிள்ளையான் அவ்வழக்கு விசாரணைக்கு தேவையான ஆவணங்கள், கோப்புக்களை சமர்ப்பிக்காத காரணத்தால் எதிர்த்தரப்பான இரா.சாணக்கியனுக்கு 50,000 ரூபாயை வழக்கு செலவினமாக வழங்குமாறு கல்கிசை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தனக்கு (தொடர்ச்சி...) 02

# மாவிலாறு திறப்பு: வெள்ளத்தில் மூழ்கியது வெருகல்



**எஸ்.கீதபொன்கலன்**
**மூதூர் நிருபர் எம்.என்.எம்.புஹாரி**

மாவிலாற்றில் நீர் திறந்து விடப்பட்டுள்ளமையால் வெருகல் பகுதியில் நேற்று (23) இரண்டாவது நாளாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிச்சேனை,சேனையூர் பகுதிகளிலுள்ள பல வீடுகள் நேற்றும் வெள்ளத்தில் மூழ்கின.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் இடம்பெயர்ந்து வெருகல் -மாவடிச்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருகோணமலை -மட்டக்களப்பு பிரதான வீதியின் மாவடிச்சேனை பகுதியில் இரண்டாவது நாளாக நீர் பிரவாகம் காணப்படுகிறது. இதனால் இவ் வீதியூடாக பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு மத்தியில் பயணிப்பதையும் காணமுடிகிறது.வெருகலிலுள்ள இலங்கைத்துறை -முத்துச்சேனை வீதியிலும் நீர் பிரவாகம் காணப்படுவதால் மக்கள் சிரமங்களுக்கு மத்தியில் பயணித்து வருகின்றனர்.

வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் நேற்றுமுன்தினத்தை விட நேற்று வெள்ள நிலைமை சற்று குறைவடைந்துள்ளது. முகாமில் தங்கியுள்ள மக்களுக்கான சமைத்த உணவுகளை வெருகல் பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகிறது.

# ரயில் ‘இ-டிக்கெட்’ மோசடி மேலும் இருவர் கைது


பிரபல சுற்றுலாத்தல மான எல்ல உள்ளிட்ட மலையக மார்க்கங்களுக்கான ‘இ-டிக்கெட்’ மோசடி தொடர்பில் மேலும் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணை க்களத் தினால் இதுவரை மொத்தமாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். திருகோணமலையில் ரயில்வே திணை க்களத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவர் 92 இ-டிக் கெட்டுகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணையின் போது, சந்தேகநபர் இ-டிக்கெட்டுகளை வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக விலைக்கு விற்க இருந்ததாகத் தெரியவந்தது. இ-டிக்கெட் மோசடியுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரும் மாத்தளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது கைது செய்யப்பட்டார்.

அதேநேரம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கண்டியில் 37 வயதுடைய ஒருவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 29 ரயில் இ-டிக்கெட்டுகள் மற்றும் 130,670 ரூபா ரொக்கப் பணம் என்பனவும் மீட்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மலையக மார்க்கங்களு டான இ-டிக்கெட் மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.




பிரபல சுற்றுலா பாதைகளுக்கான இ-டிக்கெட்டுகள் இணையத்தில் வெளியிடப்பட்ட 42 வினாடிகளில் வியக்கத்தக்க வகையில் விற்றுத் தீர்ந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணையைத் தொடங்கியுள்ளதாக ஜனவரி 20ஆம் திகதியன்று சிஐடியினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சில குழுக்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் அனைத்து டிக்கெட்டுகளையும் வாங்கி சுற்றுலா பயணிகளுக்கு அதிக விலைக்கு மறுவிற்பனை செய்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பாக 2,000 ரூபாவான டிக்கெட் விலை மறுவிற்பனை மூலமாக 16,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமையும் கண்டறியப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ்...

ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டு மருதானை பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அப்பெண்ணை நேற்று காலை மாளிகாகந்த நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் தயாரான சந்தர்ப்பத்திலேயே அவர் தற்கொலை செய்து கொண்டமை தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவிடம் “ஒருவன்” செய்திப்பிரிவு கேள்வியெழுப்பியது.

“குறித்த பெண் நீண்ட நாட்களாக கொழும்பில் பணி புரிந்து கொண்டிருக்கும் நிலையில் விபச்சாரத் தொழிலிலும் ஈடுபட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் அவர் மீது வழக்குத் தொடரப்பட்ட நிலையில் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தற்போது பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெண்ணின் குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் பிரேத பரிசோதனைகள் இடம்பெறும் என பொலிஸ் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியது.

மேலும், பிரேத பரிசோதனைகளின் பின்னரே தற்கொலையா அல்லது கொலையா என்பதை உறுதிப்படுத்த முடியும் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு “ஒருவன்” செய்திப்பிரிவுக்கு தெரிவித்தது.

இந்நிலையில், நேற்று (23) பிரேத பரிசோதனைகளின் பின்னர் தற்கொலை என பொலிஸ் ஊடகப்பிரிவு “ஒருவன்” செய்திப் பிரிவுக்கு உறுதிப்படுத்தியது.

24 மணித்தியாலமும் பொலிஸ் அதிகாரிகள் தரித்திருக்கும் மருதானை பொலிஸ் நிலையத்தின் விளக்கமறியலில் பெண்ணொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளமை சந்தேகத்திற்கிடமான ஒரு விடயம் என விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசராணைகளை ஆரம்பித்துள்ளது.

எவ்வாறாயினும், எந்தவொரு குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படும் சந்தேகநபர்கள் தொடர்பிலான முழுப் பொறுப்பும் பொலிஸாரையே சாறும் என சட்டத்தரணிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

## புதிய கல்வி...

செய்ய எதிர்பார்ப்பதாகவும்

தெரிவித்த பிரதமர்,தற்போதுள்ள கல்வி முறை மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக மாற்றியமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கல்வியில் போட்டித்தன்மையைக் குறைக்கும் நோக்கில், 2026 முதல் கல்விச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.பரீட்சை முறை மற்றும் பாடத்திட்டத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அழகியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் போன்ற பாடங்களின் உள்ளடக்கத்தை மிகவும் பொருத்தமானதாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை அந்தப் பாடங்களை ஒருபோதும் நீக்கும் எண்ணம் இல்லை எனவும் பிரதமர் ஹரிணி வலியுறுத்தினார்.

மேலும், கல்வி முறை மாற்றத்தை நோக்கி இட்டுச் செல்லப்படும் நேரத்தில், மூன்று துறைகளில் அவ்வாறு செய்ய விரும்புவதாகக் கூறிய பிரதமர், ஆசிரியர் பயிற்சி, பாடசாலை அமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தி பணியாற்றுவேன் என்றும் கூறினார்.

## வெட்கம்...

குரலெழுப்பி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிகளும் இதற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றனர்.

கொழும்பு விஜேராம மாவத்தையில் மஹிந்த ராஜபக்ச வசிக்கும் இந்த வீடு ஒரு ஏக்கர் மற்றும் 13.8 பேர்ச் கொண்டது. இது 3128.4 மில்லியன் பெறுமதியான வீடாகும் . 30534 சதுர அடியை இந்த வீடு கொண்டுள்ளது. இரண்டு பேர் வசிப்பதற்கு இவ்வளவு பெரிய வீடு. இந்த வீட்டுக்கு மாதம் 46 இலட்சம் வாடகையை செலுத்த வேண்டும் என அரச மதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இந்த வீட்டை காப்பாற்றதான் மஹிந்த மற்றும் சஜித்தின் ஆதரவாளர்கள் பேசுகின்றனர்.

ஹேமா பிரேமதாசவை பார்த்துக்கொள்ள 2021, 2022ஆம் ஆண்டில் 8 இலட்சத்துக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசிக்கும் வீட்டை பராமரிக்க மாத்திரம் கடந்த சில வருடங்களாக 19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. கோட்டாபய ராஜபக்சவின் வீட்டுக்காக 16ஆயிரம் ரூபாவரை செலவிடப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ச வசிக்கும் வீட்டுக்கு 2021ஆம் ஆண்டு 33 இலட்சம், 2022இல் 3 இலட்சத்து 95ஆயிரம் ரூபா, 2023இல் 18.336 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மொத்தமாக 393 இலட்சம் 2023ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. மேலதிகமாக 9 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறுதான் மக்கள் பணத்தில் இவர்கள் வாழ்கின்றனர். இந்த சுமையை மக்கள் மீது எவ்வாறு செலுத்த முடியும். மக்கள் இந்த சுமையை சுமந்துக்கொள்வது நியாயமா? சந்திரிக்காவின் வீடு இன்னமும் மதிப்பீடு செய்யப்படவில்லை. அவர் லண்டனில் இருப்பதாக கூறியுள்ளார். அவரது வீடு குறித்தும் மதிப்பீடு செய்யப்படும்.

## சாணக்கியனுக்கு...

அவமதிப்பாகக் கருத க்கூடிய வகையில் கருத்து வெளியிட்டதாக பிள்ளையான் என அறியப்படும் முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு நேற்று கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில்அழை க்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் முன்னிலையாகியதோடு அவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வாதாடினார்.

வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தன் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. இதன்போது, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் , இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்ற வாதத்தை முன்வைத்தார்.

வழக்கு விசாரணைக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், வழக்குத் தாக்கல் செய்த சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு வழக்கு செலவினமாக 50,000 ரூபாயை எதிர்த்தரப்புக்கு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், இவ்வழக்கின் அடுத்த வழக்கு விசாரணை ஏப்ரல் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## புலமைப்பரிசில்...

323,900 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியதுடன், அதில் 319,284 பேர் சித்தியடைந்துள்ளதாகவும், 51,244 பேர் வெட்டுப்புள்ளிக்கு சித்தி பெற்றுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சை தொடர்பில் அல்லது பரீட்சார்த்திகளுக்கு புள்ளிகள் தொடர்பாக மேன்முறையீடு செய்துகொள்ள வேண்டிய தேவை இருப்பின் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 2025 பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமையில் மேன்முறையீட்டை செய்துகொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 75நாளில்...

மேலும் கருத்து வெளியிட்ட அமைச்சர்,

டொனால்ட் டிரம்ப் ஒரே நாளில் பல கையெழுத்துகளை இட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்னர் கூறினர். அவர் செய்தது என்ன? உலக சுகாதார ஸ்தாபனத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றியுள்ளார். பாரிஸ் உடன்படிக்கையில் இருந்து விலகியுள்ளார். உலகம் வெப் பமடைந்துவருவது தொடர்பில் பல்வேறு கருத்தாடல்கள் உள்ளன. இத்தருணத்தில் அந்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறியுள்ளார்.

டிரம்ப் 75 நாட்களில் செய்யாத பல விடயங்களை ஜனாதபதி அநுரகுமார திசாநாயக்க 63 நாட்களுக்குள் செய்துள்ளார். அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுபவருக்கு தமது நிர்வாகத்தை அமைத்துக்கொள்ள 75 நாட்கள் அவகாசம் கிடைக்கும். ஆனால், எமது அமைச்சரவை அமைந்து 63 நாட்கள்தான் ஆகியுள்ளன. நாம் அதில் பல வேலைத்திட்டங்களை செய்துள்ளோம்.

எனவே, டிரம்ப்பை வரவேற்கும் நீங்கள், பல வேலைத்திட்டங்களை செய்து முன்னுதாரணமாக உள்ள எமது ஜனாதிபதியை வரவேற்க வேண்டும். சிறந்தப் பணிகளை செய்பவர்களை வரவேற்கும் மனப்பான்மை அவசியமாகும்.” என்றார்.

## அர்ச்சுனாவின்...

அர்ச்சுனா எம்.பி, ஜே.வி.பி மனித படுகொலையை செய்த கட்சி என்றும் குற்றம் சுமத்தினார்.

எதிர்காலத்தில் எதிர்க்கட்சியில் இருந்தே தமது கருத்துகளை வெளியிட உள்ளதாகவும் கூறினார்.

ஆளுங்கட்சி சார்பில் இதற்கு பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, அர்ச்சுனா எம்.பிக்கான பேச்சு உரிமை மறுக்கப்படுவதை வன்மையாக கண்டிக்கிறோம். இது ஆளுங்கட்சியின் பணி அல்ல. எதிர்க்கட்சியின் பணியாகும். அவருக்கான நேரத்தை ஒதுக்கீடு செய்துகொடுக்க எதிர்க்கட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார். அத்துடன், அவர் மீது அரசாங்கம் எவ்வித வழக்குகளையும் பதிவுசெய்யவில்லை. அது அவரது தனிப்பட்ட விவகாரம் அதனை அவர் நீதிமன்றில்தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.இதன்போது குறிப்பிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா, அர்ச்சுனா எம்.பியின் விவகாரம் தொடர்பில் சபாநாயகரிடம் அறிக்கை கோரியுள்ளோம். அதுதொடர்பில் இன்னமும் உரிய பதில் அளிக்கப்படவில்லை. தற்போது அர்ச்சுனா எம்.பி எதிர்க்கட்சியில் பணியாற்ற உள்ளதாக கூறியுள்ளார். அவருடன் பேசி இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என்றார்.

## உடன் விசாரண...

என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பினார்.

இந்த விடயம் படுகொலையா என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளதால் சம்பவம் தொடர்பில் உடனடியாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

ஆளும் தரப்பில் இதற்கு பதில் அளித்த பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இன்றைய தினத்துக்குள் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதாகவும் கூறினார்.

## கிளிநொச்சியில்...

கதவுகள் மூன்றாவது முறையாகவும் திறக்கப்பட்டதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஐயன் கோயிலடி, ஊரியான், பெரியகுளம் கண்டாவளை உள்ளிட்ட பகுதிகளில் வயல் நிலங்கள் நீரில் மூழ்கி அழிவடைந்துள்ளன.

வெள்ளப் பாதிப்பு காரணமாக குளங்களில் நீர்மட்டம் அதிகரித்தமையால் முதலைகளும் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வீட்டிலோ அல்லது வெளியில் செல்வோர் தனிமையில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் வட்டக்கச்சி, பெரியகுளம் பகுதியில் இருந்து புளியம்பொக்கனை செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் குறுக்கறுத்து பாய்வதன் காரணமாக கனரக வாகனங்கள் மாத்திரமே இவ்வீதி ஊடாக பயணிக்க கூடியதாக உள்ளது. பாடசாலை செல்லும் சிறார்களை பெற்றோர் தூக்கிச்சென்றனர். பாடசாலை மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மழையுடன் கூடிய வானிலை நேற்று குறைவடைந்தாலும், நீர்த் தேக்கங்களில் இருந்து வெளியேறும் நீர் மக்கள் குடியிருப்புக்களை ஊடறுத்து செல்வதால் மக்கள் மூன்றாவது முறையாகவும் வெள்ள பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

## அநுர யாப்பா...

நீதவான் நீதிமன்றம் நேற்று (23) உத்தரவிட்டது.நீண்ட பரிசீலனைக்குப் பிறகு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2014 ஆம் ஆண்டு பிங்கிரிய, நாரம்மல பகுதிகளில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 61 இலட்சத்து 46 ஆயிரத்து 110 ரூபாய் நிதியைப் பெற்று, அந்த நிதியை அதற்காகப் பயன்படுத்தாமல், அதை 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்திற்கு பயன்படுத்தியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த நிதியை முறைக்கேடாக பயன்படுத்தியுள்ளதுடன், பொதுச் சொத்தின் கீழ் வரும் குற்றமாக இருப்பதால், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# ரோஹிங்கியா அகதிகளுக்கான மனிதாபிமான தீர்மானத்துக்கு ஆதரவு

ரோஹிங்கியா மக்கள் அகதிகளாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேசும் போது ஒரு நாடு என்ற வகையில் பின்பற்ற வேண்டிய சர்வதேச கொள்கை இணக்கப்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலம் உருவாக்கப்பட்ட சர்வதேச சட்டங்கள் காணப்படுகின்றன. ஒரு நாடாக சில சட்டங்களில் கையெழுத்திடப்படாவிட்டாலும், மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டு நடந்து கொள்ள வேண்டும். குறிப்பிட்ட அகதிகள் விடயம் ஏற்படும் போது நாம் சர்வதேச நியமங்களைப்



பின்பற்றியொழுக வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். என்னதான் சர்வதேச தர நியமங்கள் ஏற்பாடுகள் குறித்த புரிதல் இருந்தாலும், மியான்மரில் 2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் கூட இந்த ரோஹிங்கியா மக்கள் உள்வாங்கப் படவில்லை. இந்த ரோஹிங்கியா மக்கள் முகம்கொடுக்கும் நிலைக்கு மத்தியில் ஒரு நாடாக நாம் மனிதாபி மானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மனிதாபிமானத்தை மதிக்கும் நாடாக இது பொறுப்பும் கடமையுமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். ரோஹிங்கியா அகதிகளின் உரிமைகள் தொடர்பில் நேற்று (23) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். 2024 டிசம்பர் 19 ஆம் திகதி கடல் வழியாக முல்லைத்தீவுக்கு வந்த இந்த அகதிகளை மனிதாபிமான மற்றும் சர்வதேச கொள்கைகளின் அடிப்படையில் நடத்துவது முக்கியமாகும். இந்த அகதிகளுக்கான கடமைகளை நியாயமாக மேற்கொள்ள வேண்டும்.

இவர்களை இந்நாட்டை விட்டு வெளியேற்றக் கூடாது. இந்த அகதிகள் விடயத்தில் எடுக்கப்படும் எந்தவொரு மனிதாபிமான நடவடிக்கைகளுக்கும் அரசாங்கத்துக்கு எமது ஆதரவை நாம் வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்**: இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வண்டும்.

**ரிஷபம்**: புதிய நபர்களின் நட்பு இன்று உங்களுக்கு கிடைக்கும்.

**மிதுனம்**: இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்**: நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும்.

**சிம்மம்**: உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள்.

**கன்னி**: நீங்கள் விரும்பியது இன்று நிறைவேறும்.

**துலாம்**: இன்று வெற்றி நிச்சயம்.

**விருச்சிகம்**: இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்றலுடன் செயல் பட வேண்டும்.

**தனுசு**: இன்று உற்சாகத்துடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**மகரம்**: இன்று மிகச் சிறப்பான நாள்.

**கும்பம்**: இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**மீனம்**: இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 06:22 வரை தசமி பின்பு ஏகாதசி.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 04:29 வரை விசாகம் பின்பு அனுஷம்.
**யோகம்:** சித்த,மரண.
**சந்திராஷ்டமம்:** பரணி.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**எமகண்டம்:** 03:00 PM முதல் 04:30 AM வரை.

# லசந்த விக்ரமதுங்க, வசீம் தாஜுதீன் கொலை விசாரணைகளில் சிக்கல்

## நீதி கிடைப்பது உறுதி - ஜனாதிபதி

(கனுஷியா புஷ்பகுமார்)

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, ரகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலைகள் இடம்பெற்று நீண்ட நாட்கள் கடந்துள்ளதால் குறித்த கொலைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைகள் தொடர்பில் விசாரணைகள் எதிர்கொள்ளும் போது புலனாய்வாளர்கள் சிரமங்களை மேற்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். பிரதான சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய ஒரு முக்கிய சாட்சி உயிரிழந்து விட்டதாகவும், தாஜுதீனின் கொலையை விசாரித்த தடயவியல் மருத்துவரும் உயிரிழந்து விட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



இந்த சூழ்நிலைகள் விசாரணைக்கு சிரமங்களை ஏற்படுத்தியுள்ளன.எனினும், நீதி நிலைநாட்டப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், தற்போது ஆட்சியமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிக்கல் நிலைகளை சந்தித்து வருகின்றது தெளிவாகிறது என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பயங்கரவாத தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும்

## அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுவதாக நீதி அமைச்சர் தெரிவிப்பு

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுவதாகவும் அது தொடர்பான தகவல்களை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் அறிவிக்க முடியுமென்றும் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம்(22) நடைபெற்ற கிளின் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் முன்வைத்த விடயங்களுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்போது நீதி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் முக்கியமான விடயங்களை குறிப்பிட்டார். இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அது தயாரிக்கப்பட்டதும் குழுவில் ஆராய்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் உறுதிப்படுத்துவோம். இதற்கமைய பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்பதுடன் பயங்காரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என்றார்.

# கால்நடைத் தீவனம், பியர் உற்பத்திக்கும் அரிசி வழங்குவது அவசியம்

(கனுஷியா புஷ்பகுமார்)

நேரடி நுகர்வைப் போலவே கால்நடைத் தீவனம் மற்றும் பியர் மதுபானம் போன்ற மனித நுகர்வுடன் தொடர்புடைய ஏனைய தொழில்களுக்கும் உள்ளீடாக அரிசியை வழங்குவது அவசியம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. உணவுக் கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்கான உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு கூட்டம் நேற்று முன்தினம் (22) ஜனாதிபதி செயலகத்தில் முதன்முறையாக சந்தித்தபோது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவு முறையை உறுதி செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கையை அடைவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதை உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதில் துல்லியமான தரவுகளும் தகவல்களும் மிக முக்கியமானவை என்றும், அவை இல்லாமல் முடிவுகளை எடுக்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும், துல்லியமான தரவை உருவாக்குவதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் விவசாயக் கொள்கையை செயல்படுத்தும்போது, கோழி மற்றும் முட்டைத் தொழிலுக்கான கால்நடை தீவனம், பியர் உற்பத்தி போன்ற மனித நுகர்வு தொடர்பான அனைத்துத் தொழில்களுக்கும் அரிசியை நேரடி நுகர்வுக்கான உள்ளீடாக வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும் என்று விவசாய அமைச்சர் கூறினார். மேலும், நாட்டு மக்களின் உணவு நுகர்வை ஆய்வு செய்து, ஆரோக்கியமான மக்கள் தொகையை உருவாக்கவும், உணவு வீணாவதைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு குழு உறுப்பினர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கை கட்டமைப்பை நிறுவுதல், அத்தியாவசிய உணவுத் தகவல் அமைப்பைப் பராமரித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் புதிய திட்டத்தை உருவாக்குதல், அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் உள்ளூர் பொருட்களை அதிகரித்து விநியோகிப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல விடயங்கள் விவாதிக்கப்பட்டன. உணவுப் பாதுகாப்பு, உணவு விலைகள் மற்றும் சந்தை மேலாண்மை குறித்தும் விவாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## -அமைச்சர் சந்தன அபேரத்ன உறுதி

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என பொது நிர்வாகம்,உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன உறுதியளித்துள்ளார்.



வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்னவை சந்தித்து கலந்துரையாடியபோதே அமைச்சர் இவ்வாறு உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில் வெளிநாட்டு பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு பின்னர் ரத்துச் செய்யப்பட்ட நியமன விடயம் மற்றும் பல்வேறு தாமதங்கள் காரணமாக இதுவரை அரச நியமனங்கள் வழங்கப்படாத பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பாக பல தடவைகள் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடப்பட்டது. அமைச்சருடனான இச்சந்திப்பின் போது, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிச்சயமாக விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன உறுதியளித்தார் என்றார்.

# இனங்களுக்கிடையில் சமாதானத்தை நிலைநிறுத்தும் கற்றலுக்கு சான்றிதழ்





(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஒத்துழைப்புடன் கிழக்குப் பல்கலைகழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்றல்கள் நிலையத்தினால் நடத்தப்பட்ட பன்மைத்துவமும் உள்ளடக்கிய சேவை வழங்கல் மூலமும் அமைதியை நிலைநிறுத்துவதற்காக மேம்பட்ட கற்றல் பாட நெறியில் பங்குபற்றி சித்தியடைந்த 9 பேருக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் இந்த சான்றிதழ்களை சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். ஜெயராசா தலைமையில் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பப் பூங்கா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக முதல்வர், பல்கலைக்கழக பீடாதிபதிகள், கல்வி சார், சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கையில் சமூகங்களுக்கிடையில் சமாதானத்தை நிலை நிறுத்தவதற்காக தேசிய சமாதானப் பேரவை அடி மட்டத்திலிருந்து அரசாளுகை மட்டம் வரை பல்வேறு சமாதான எண்ணக்கரு சார்ந்த கல்வியூட்டலைச் செய்து வருகிறது.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# பொலிஸில் பெண் மரணம் உணர்த்தும் செய்தி என்ன ?

கொழும்பு - மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் மரணித்து உள்ள சம்பவம் நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

கிளிநொச்சி திருவையாற்றைச் சேர்ந்த பொன்னையா கலாதர்ஷினி என்ற பெயருடைய 32 வயது பெண்மணியே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார்.

நீதிமன்ற பிடியாணை ஒன்றின் கீழ் கடந்த 21 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட இருந்த நிலையில், தற்கொலை செய்து உயிரை மாய்த்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கடந்த 21 ஆம் திகதி இரவு 8 மணி அளவில் கைது செய்யப்பட்ட இந்த பெண், அடுத்த நாள் அதிகாலை நான்கு மணி அளவில் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் மரணம் கடுமையான சந்தேகங்களை ஏற்படுத்தி இருக்கிறது. இவர் தற்கொலை செய்து கொண்டாரா...? கொலை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டாரா..? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய தமிழரசு கட்சி எம். பி ஸ்ரீதரன்" அரசாங்கம் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

பொலிஸாரின் அறிவிப்பு பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன. பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பெண், தான் அணிந்திருந்த நீண்ட காற்சட்டையை பயன்படுத்தி, அந்த சிறை கூண்டின் உள்ளேயே தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானை பொலிஸ் நிலையம் என்பது, 24 மணி நேரமும் பரபரப்போடு செயல்படுகின்ற ஒரு மக்கள் பணிமனை. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெண், அதிகாலை வேளையில் தற்கொலை செய்திருக்கிறார் என்றால், பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் எழுகின்றது.

தடுப்பு காவல் சிறையினுள் ஒருவரை அடைத்து விட்டால், அதனோடு பொலிஸாரின் பணி முடிவடைந்து விடுவதில்லை. அந்தக் கைதியின் பாதுகாப்பு, அடிப்படை வசதிகளை பேணுவது பொலிஸாரின் முக்கிய பணி ஆகும். ஆனால் இது எங்கே முழுமையாக மீறப்பட்டு இருக்கிறது என்பதை நாம் காண முடிகின்றது.

பொலிஸ் அதிகாரிகள் விழிப்போடும், உஷார் நிலையிலும் இருக்கின்ற ஒரு பொலிஸ் நிலையத்தில் அப்பாவிப் பெண்ணின் உயிர் காவு கொள்ளப்பட்டு இருக்கிறது.

இலங்கைத் திருநாட்டை பொறுத்தளவில் இதில் சமூகத்தின் பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டியவர்கள் பொலிஸர். ஆனால் இலங்கையில் நடந்திருக்கின்ற சம்பவங்களும், நடக்கின்ற சம்பவங்களும் மக்கள் மத்தியில் வெறுப்பு நிலையை உருவாக்கி இருப்பதையே நாம் காண முடிகின்றது. சந்தேகத்தில் கைது செய்யப்படும் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்படும் விதம், பாரிய மனித உரிமை மீறலாக சுட்டிக் காட்டப்பட்டு இருக்கின்றது. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற பொழுது, சித்திரவதைகள் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் பதிவாகி இருக்கின்றன. சிவில் கடமைகளில் மக்களோடு மக்களாக பணி புரியும் பொலிஸாருக்கு நெருக்கடிகள் இருக்கத்தான் செய்யும். இதனை நாம் மறப்பதற்கு இல்லை. ஆனால், மனித உரிமைகளை பேண வேண்டிய பொலிஸார், நடந்து கொள்கின்ற விதங்கள், மக்கள் மத்தியிலே அச்சத்தை உருவாக்குகின்றது.

முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையம் செல்பவர்கள் கடுமையான அச்ச உணர்வோடு தான், செல்கிறார்கள். இது காலம் காலமாக தொடரும் நிகழ்வாக நடந்து கொண்டிருக்கிறது.

மனித உரிமைகளும் மனிதாபிமானமும் முறையாக பேணப்படுவதில்லை என்பது இலங்கை பொலிஸாருக்கு எதிரான குற்றச்சாட்டு ஆகும். கொழும்பு நீதிமன்றம் ஒன்று, இதனை பகிரங்கமாக அறிவித்தது.

கொழும்பு நீதிமன்ற வளாகத்துக்கு விசாரணைக்கு கொண்டுவரப்பட்ட, சிறைக் கைதிகள் பலர், கைகளில் விலங்கிடப்பட்டு - ஒருவருக்கு ஒருவர் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்கள். இதனைப் பார்த்து ஆத்திரமடைந்த நீதிபதி, " மனிதனையும் மனித உயிர்களையும் மதிக்க கற்றுக் கொள்ளுங்கள். சிறைக் கைதிகளும் மனிதர்களே..." என்று மிகவும் காட்டமாக தெரிவித்தார். சிறை காவலர்கள் தான் அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தார்கள் என்பது உண்மை. ஆனால், மனிதாபிமானம் தொலைந்து போய் இருக்கிறது என்பதை நீதிபதி தெட்டத் தெளிவாக கூறியுள்ளார்.

இதில் கடமையில் ஈடுபடுகின்ற பொலிஸாரின், தவறான வழிமுறைகளால், பிரச்சினைகள் பல உருவாகி இருக்கின்றன. அவ்வாறான சம்பவங்களின் பின்னணியிலிருந்த பொலிஸார் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். கண்டியிலே அண்மையில் பாடசாலை சென்ற மாணவி, பலாத்காரமாக கடத்தப்பட்டார். இந்த விடயத்தில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முறையாக செயல்படவில்லை என்று தெரிய வந்ததை அடுத்து பொலிஸ் தலைமையகம் அவரை பணி இடைநீக்கம் செய்திருக்கிறது. ஆகவே, பொலிஸாரின் பணிகள் நாட்டின் சிவில் சமூகத்தை வழி நடத்துவதற்கு நெம்புகோலாக இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மருதானை பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்திருக்கின்ற இந்த பெண் மீது எந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தாலும் பரவாயில்லை, இங்கு மனிதம் பேசப்படவில்லை என்பதுதான் இங்கே முக்கியமாக நாம் பார்க்க முடிகின்றது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், விபச்சார குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றார்கள். இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுகின்ற அதே நேரம், தானாகவே அவர் உயிரை மாய்த்துக் கொண்டார் என்று எடுத்துக் கொண்டாலும், சமூக அச்சங்களுக்கு அஞ்சி இந்த நிலைக்கு அவர் தள்ளப்பட்டு இருக்கலாம். மனிதாபிமானம், மனித உணர்வுகள் அனைத்தும் பொய்த்துப் போன நிலையிலேயே ஒருவர் தன்னை மாய்த்துக் கொள்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த கிளிநொச்சிப் பெண் மீது எவ்வித குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இருந்தாலும், சமூக நெருக்கடியை எதிர்கொண்ட நிலையில் மனிதம் மரணித்திருக்கிறது...



# பங்களாதேஷ் – சீனா நெருக்கம்: மோசமடையும் இந்திய உறவு

பங்களாதேஷிற்கு வழங்கிய கடனை திரும்ப செலுத்துவற்கான அவகாசத்தை 20 ஆண்டுகளில் இருந்து 30 ஆண்டுகளாக உயர்த்த சீனா ஒப்புக்கொண்டுள்ளது. பங்களா தேஷின் இடைக்கால அரசின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசகர் தவ்ஹீத் ஹுசைன், சீனாவுக்கு பயணம் மேற்கொண் டுள்ளார். சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீயுடனான சந்திப்பின்போது அவர் கடன் குறித்து பேசினார். சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி திட்டத்தை செயல்படுத்துவதில் உறுதியாக இருப்பதாக இருநாடுகளும் தெரிவித்தன. கடந்த ஆண்டு பங்களாதேஷில் ஏற்பட்ட கொந்தளிப்பிற்கு பிறகு அமைக்கப்பட்ட இடைக்கால அரசு சீனாவுடன் நெருக்கமாக இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

### கடனை திருப்பி செலுத்த பங்களாதேஷிற்கு கூடுதல் அவகாசம்

சீனா– பங்களாதேஷ் இடையே தூதரக உறவுகள் ஆரம்பித்து இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. சீனாவுடனான பொருளாதார வர்த்தக உறவுகள் முக்கியமானவை என சீனாவுக்கு செல்வதற்கு முன்பாக பங்களாதேஷின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசகர் தவ்ஹீத் ஹுசைன் தெரிவித்தார். கடன்களைத் திருப்பி செலுத்துவதில் பங்களாதேஷின் சிறந்த செயல்பாட்டை கருத்தில் கொண்டு, கடனை திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசத்தை நீட்டிக்க சீனா "கொள்கை ரீதியான அனுமதியை" அளித்திருப்பதாக பங்களாதேஷ் நாளிதழ் டாக்கா டிரிபியூன் தெரிவித்துள்ளது. சீன வெளியுறவுத்துறை அமைச்சருடனான சந்திப்பின்போது தவ்ஹீத் ஹுசைன் மூன்று விவகாரங்களை எழுப்பியதாக அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது. கடன் மீதான வட்டியை 2 முதல் 3 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக குறைக்கவேண்டும், உறுதிக் கட்டணத்தை தள்ளுபடி செய்யவேண்டும் மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை 30 ஆண்டுகளாக அதிகரிக்கவேண்டும் என சீனாவிடம் அவர் கோரிக்கையை முன்வைத்தார். இரு தரப்பு பேச்சுவார்த்தையின்போது, விரிவான ஒத்துழைப்பு கூட்டுறவை தொடர்வதற்கு பங்களாதேஷும், சீனாவும் உறுதி அளித்தன. பரவலான போராட்டங்களைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதி அப்போதைய பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி இந்தியா வந்தார். அதன் பின்னர் அமைக்கப்பட்ட இடைக்கால அரசை முகமது யூனுஸ் நடத்திவருகிறார். யூனுஸ் மற்றும் அவரது ஆலோசகர்கள் அதிகாரத்திற்கு வந்த பிறகு பங்களாதேஷ் மற்றும் இந்தியா இடையில் உறவுகள் இறுக்கமாக இருக்கின்றன. அதற்கு நேர்மாறாக, பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான உறவுகளை பங்களாதேக்ஷ் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

### சீனாவுடன் நெருக்கம்

பங்களாதேஷில் அரசியல் நெருக்கடி நிலவியபோதும், சீனா தனது உறவுகளை மேம்படுத்தியே வந்தது அந்த காலகட்டத்தில், ஷேக் ஹசீனாவின் அரசை கவிழ்ப்பதில் முக்கிய பங்காற்றிய மாணவத்தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சீன பிரதிநிதிகள் சந்தித்துக்கொண்டிருந்தனர். தவ்ஹீத் ஹுசைனும் பங்களாதேஷின் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசகரான பிறகு முதல் முறையாக சீனாவுக்கு பயணம் மேற்கொண்டார் என சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ குறிப்பிட்டார்.

சைனா டெய்லி நாளிதழின்படி, "பதவியேற்றப் பின் ஹுசைன் தனது முதல் வெளிநாட்டு பயணத்திற்கு சீனாவை தேர்ந்தெடுத்தார் என்பது உண்மைதான். இது சீனாவுடனான உறவுக்கு பங்களாதேஷ் இடைக்கால அரசு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை காட்டுகிறது" என வாங்யீ தெரிவித்தார். "அயல் நாடுகளுடனான தனது உறவுகளில் சீனா எப்போதும் பங்களா தேஷிற்கு முன்னுரிமை அளித்துள்ளதுடன், பங்களாதேஷ் மக்களுடன் நல்ல அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது" என வாங் யீ தெரிவித்தார். பங்களாதேஷின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் நிலப்பகுதிகளை பாதுகாப்பதில் உதவியதற்காக சீனாவிற்கு தவ்ஹீத் நன்றி தெரிவித்ததாக பங்களாதேஷ் செய்தித்தாள் தி டெய்லி ஸ்டார் குறிப்பிட்டுள்ளது.

### "இந்தியாவின் இழப்பு, சீனாவின் வரவு"

சீனாவுடன் நெருக்கமான பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கு பங்களாதேஷ் முக்கியத்துவம் அளிப்பதாகவும், மற்றொருபுறம் இந்தியாவுடனான அதன் உறவில் இறுக்கங்கள் அதிகரித்து வருவதாக புளூம்பர்க் ஒரு செய்தியில் தெரிவித்துள்ளது.

"சீனா மற்றும் பங்களாதேஷ் இடையிலான உறவில் மேலும் வளர்ச்சியை நாம் காணலாம்" என புளூம்பர்க் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், பொருளாதார நிபுணரும், சர்வதேச விவகாரங்களில் பங்களாதேஷ் இடைக்கால அரசிற்கு சிறப்பு தூதருமான லுட்ஃபீ சித்திக்கி தெரிவித்தார். பாரம்பரியமாக இந்தியாவுக்கு நெருக்கமாக இருந்த பங்களாதேஷ் தற்போது கிழக்காசிய நாடுகளுடனான உறவில் ஆர்வம் காட்டுவதாக அவர் தெரிவித்தார். "நாங்கள் பல நாடுகளுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருப்போம். இன்றைய காலகட்டத்தில் பலதரப்பு தொடர்புகளுடன் இருப்பது அவசியம்" என சித்திக்கி குறிப்பிட்டார். "சீனாவிலிருந்து பங்களாதேஷில் கூடுதல் முதலீடுகள் இருக்கும்" என அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் பல விவகாரங்களில் கருத்துவேறுபாடுகள் இருக்கும் சூழ்நிலையில் சித்திக்கி இந்த கருத்தை தெரிவித்துள்ளார். ஷேக் ஹசீனாவின் பதவிக் காலத்தில் இருந்ததைப் போல இருநாடுகளிடையே நல்லுறவு இல்லை.

ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்பவேண்டும் என பங்களாதேஷ் இடைக்கால அரசு விரும்புகிறது. அதே நேரம், இந்து சிறுபான்மையினர் பாதுகாப்பை பங்களாதேஷ் அரசிடம் இந்தியா எழுப்பியுள்ளது. இந்தியாவின் வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரியும் கடந்த மாதம் பங்களாதேஷிற்கு பயணம் மேற்கொண்டார். ஆனால் இரு நாடுகளுக்கிடையிலான இறுக்கம் தளரவில்லை. சர்வதேச எல்லையில் முள் கம்பிகளை கொண்டு வேலி அமைப்பதில் தற்போது இரண்டு நாடுகள் இடையில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. பங்களா தேஷிற்கு சீனா தற்போது அளித்துள்ள சலுகைகளை இந்தியாவுடன் தொடர்புபடுத்துகிறார் பாதுகாப்புத்துறை வல்லுநர் டெரக் ஜே. கிராஸ்மேன். "இந்தியாவின் இழப்பு, சீனாவின் வரவு" என சமூக வலைதள பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் இந்தியாவிற்கு பங்களாதேஷின் கடன், பங்களாதேஷில் கடந்த ஆண்டு இடைக்கால அரசு பதவியேற்ற பின்னர் சீனாவிற்கு தவ்ஹீத் ஹுசைன் பயணம் மேற்கொண்டிருப்பது அந்நாட்டின் வெளியுறவு கொள்கை மாற்றத்தை பிரதிபலிக்கிறது. இதற்கு முன் பங்களா தேஷின் எல்லா வெளியுறவு அமைச்சர்களின் முதல் வெளிநாட்டு பயணம் இந்தியாவுக்குத்தான். பங்களாதேஷின் நிலையற்றதன்மை காரணமாக இந்தியாவின் ஏற்றுமதிகள் சரிந்துள்ளன. இந்தியாவின் வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் தரவுகளின்படி 2023, ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு ஓக்ஸ்ட் மாதத்தில் பங்களாதேஷிற்கு இந்தியாவின் ஏற்றுமதி 28 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆனால் சீனாவுடனான பங்களாதேஷின் நெருக்கம் ஷேக் ஹசீனாவின் பதவிக் காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது.

"சீனா பங்களாதேஷின் புதிய நண்பன் அல்ல. மாறாக 2006ஆம் ஆண்டு முதலே சீனா, பங்களாதேஷின் ஒரு பெரிய வர்த்தக நட்பு நாடாக இருந்து வருகிறது" என டாக்கா பல்கலைக்கழகத்தில் சர்வதேச கற்கைநெறி பேராசிரியர் டாக்டர், லாய்லுபர் யாஸ்மீன் குறிப்பிட்டதாக "தி பிஸினஸ் ஸ்டாண்டர் பங்களாதேஷ்" ஒரு செய்தியில் மேற்கோள் காட்டியிருந்தது. பெங்களூர் தக்ஷசீலா நிறுவனத்தில் ஆய்வு பகுப்பாய்வாளராக இருப்பவர் ரக்ஷித் ஷெட்டி. ஓர் அமெரிக்க சிந்தனைக்குழுவின், இணைய கொள்கை தளமான சவுத் ஏசியன் வாய்ஸுக்கு அவர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். பங்களாதேஷின் புதிய அரசியல் களத்தில் வேகமாக அதிகரிக்கும் சீனாவின் நடவடிக்கைகளுக்கு இணையான நடவடிக்கைகளை இந்தியா எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

ரகித் ஷெட்டியின் கூற்றுப்படி, ஷேக் ஹசீனாவின் ஆட்சிக்காலத்தில் 2016 முதல் 2022ஆம் ஆண்டு வரை சீனா பங்களாதேஷில் மிகப்பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. சீன நிறுவனங்கள் பங்களா தேஷில் 26 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளன. பங்களாதேக்ஷில் சுமார் 700 சீன நிறுவனங்கள் 5,50,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 21 பில்லியன் டொலருக்கு மேல் மதிப்புள்ள பொருட்களை பங்களாதேஷ் சீனாவிலிருந்து இறக்குமதி செய்கிறது. சீன ஆயுதங்களை அதிகபட்சமாக வாங்கும் நாடும் அதுதான்.


ஸ்டாக்ஹோம் இண்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் என்ற அமைப்பின் கூற்றின்படி, 2010 முதல் 2020 வரை பங்களாதேஷ் இறக்குமதி செய்த இராணுவ தளவாடங்களில் 73 சதவீதம் சீனாவிடம் வாங்கப்பட்டவை. பங்களாதேஷ், சீனாவுக்கு 6 பில்லியன் டொலருக்கு மேல் கடன் தொகையை திருப்பி செலுத்தவேண்டியுள்ளது. இடைகால அரசு காலத்தில் சீன நிறுவனங்கள் 85 மில்லியன் டொலர்களை முதலீடு செய்திருப்பதாக, பங்களாதேஷிற்கான சீன தூதர் ஆவ் வென், டாக்காவிலிருந்து வெளியாகும் தி டெய்லி ஸ்டார் என்ற நாளிதழில் ஒக்டோபர் முதலாம் திகதி எழுதியிருந்தார். சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்புக்கும் பங்களாதேஷ் முக்கியமானது. இந்த முன்னெடுப்பின் கீழ் கடந்த பத்து ஆண்டுகளில் பங்களாதேஷில் சுமார் 4.45 பில்லியன் டொலர்களை சீனா முதலீடு செய்துள்ளது.

### இந்தியா பங்களாதேஷ் இடையேயான வர்த்தகம்

பங்களாதேஷ், தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளர். அதேபோல பங்களாதேஷிற்கு இந்தியா ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய வர்த்தக கூட்டாளர். இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கூற்றின்படி 2023-2024 காலத்தில் 1.97 பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள பொருட்களை பங்களாதேஷ் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அதே நேரம் இந்த நிதியாண்டில் இவ்விரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 14.01 பில்லியன் டொலராக இருந்தது. இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே மின்சாரத்துறையில் ஒத்துழைப்பு வேகமாக வளர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, பங்களாதேஷ் இந்தியாவிடமிருந்து 1160 மெகாவாட் மின்சாரத்தை வாங்குவதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்தது. ஆனால், கடந்த ஆண்டு மின்சார நிறுவனங்களான பிடிசி மற்றும் எஸ்இஜஎல் எனர்ஜி இண்டியா ஆகியவை விநியோகிக்கப்பட்ட மின்சாரத்திற்கான நிலுவைத் தொகையை செலுத்தும்படி பங்களாதேஷ் மின்சார மேம்பாட்டு வாரியத்திற்கு கடிதம் எழுதியதாக ரொய்ட்டர்ஸ் முகவரகம் செய்தி வெளியிட்டிருந்தது.

நன்றி பிபிசி

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த கனடா தூதுவர்



இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னனுக்கும் தமிழ் தேசியம் சார்ந்து பயணிக்கின்ற கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் தமிழ் மக்களின் சமகால அரசியல் விவகாரம் புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் கனமழை

## பாதிப்படைந்த 19 குடும்பங்களுக்கு நிவாரணம்

(கி.வசந்தன்)

வவுனியாவில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்கியுள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேருக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வவுனியா மாவட்டச் செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர அதிகாரிகளுக்கு நேற்று (23) அறிவுறுத்தியுள்ளார்.



செட்டிகுளம் - மன்னார் பிரதான வீதியிலிருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில் காட்டுப் பாதையில் உள்ள இக் கிராமத்தில் பாதுகாப்பான மையத்தை அமைக்கக் கூட ஒரு நிரந்தரக் கட்டிடம் இல்லை.

மிகவும் கடினமான வாழ்க் கையை வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் இடம் பெயர்ந்தனர். உறவு இயந்திரம் மற்றும் பாரவூர்திகளை பயன்படுத்தி அதற்குள் தங்கியிருக்கின்றனர்.

குறித்த பிரதேசத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட மாவட்டச் அரச அதிபர், இந்த மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் தங்குமிடத்தை வழங்க உடனடி நடவடிக்கை எடுக் குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத் தினார்.

# செட்டிகுளம் - ராமையன்குளம் பகுதியில் 40 ஏக்கர் வயல் காணிகள் பாதிப்பு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் நிலவும் தொடர் மழை கார ணமாக செட்டிகுளம், ஆண்டி யாபுளியங்குளம், ராமையன்குளம் பகுதியில் சுமார் 40 ஏக்கர் வயல் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.


குறிப்பாக வவுனியா பாவற்குளம் குளத்தின் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் அந்த நீர் வழிந்தோடும் பகுதியின் கீழுள்ள வயல் நிலங்களே இவ்வாறு பாதிப்படைந்துள்ளன.

மேலும் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் நெற்பயிர்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ள நீர் தொடர்ச்சியாக பயிர்களுக்கு மேலாக மூடி பாய்ந்து வருவதாகவும் இதனால் தமது விவசாயம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியா கியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

# தொடர்ச்சியாக இடம்பெறும் தொலைத்தொடர்பு வயர்கள் அறுப்பு சம்பவங்கள்

(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம் கரவெட்டி, கரணவாய் பகுதியில் தொடர்ச்சியாக இலங்கை தொலைத்தொடர்பு சேவைக்குரிய (srilanka Telecom) வயர்கள் திருடர் களால் அறுக்கப்பட்டு வருவதா கவும், இது தொடர்பில் 8 முறைப் பாடுகள் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அத்துடன் இதுவரை எவரையும் நெல்லியடி பொலிஸார் கைது செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திருடர்களால், அரச சொத்தான ஸ்ரீலங்கா ரெலிகொம் இணைப்பு கேபிள்கள் அறுக்கப்படுவதனால் தொலைத்தொடர்பு பாதிக்கப்ப டுவதாகவும், அரச சொத்துக்கள் நாசமாக்கப்படுவதற்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுவ தில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# மாணவி பாலியல் துன்புறுத்தல்; ஆசிரியர் கைது

(பு.கஜிந்தன்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பாடசாலை மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய ஆசிரியரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி, குறித்த மாணவியை (வயது 13) அதே பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 52 வயதுடைய ஆசிரியர் பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக நேற்று முன்தினம் (22) கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரான ஆசிரியரை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலை இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நான்காவது இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் புதன் கிழமை (22) இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடர் நிகழ்வுகளில் ஒன்றாகவும், பல் கலைக்கழக சர்வதேச மாநாடுத் தொடரின் ஓர் அம்சமாகவும் இந்த இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நடைபெறுகின்றது.

கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொண்டார். மாநாட்டின் தலைமையாளராகப் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், மற்றும் திறப்புரையாளராக இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன் சிவ தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் கலைப்பீடத் தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாயக் கற்கைகள் சார்ந்த 132 ஆய்வுக்கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர் களால் சமர்ப்பிக்கப்பட்டன.

# 32 பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தம்பதிக்கு வவு. நீதிமன்றம் 14 நாட்கள் விளக்கமறியல்

(கி.வசந்தன்)

32 பிடியாணைகள் பிறப் பிக்கப்பட்ட நிலையில் வவுனி யாவில் மறைந்திருந்த தம்பதி யினர் வவுனியா தனிப்படை பொலிஸாரால் கைது செய் யப்பட்டு நீதிமன்றில் முற்படுத் தப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் நேற்று முன்தினம் (22) உத்தரவு பிறப்பித் துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ருமேனியாவிற்கு வேலைக்கு அனுப்புவதாக கூறி சுமார் 30 மில்லியன் ரூபாய் மோசடி செய்ததாக ஒரு தம்பதியினருக்கு எதிராக முறைப்பாடுகள் மட்டக் களப்பு, ஏறாவூர் பொலிஸாருக்கு செய்யப்பட்டிருந்தது.

விசாரணையின் போது 28க்கும் மேற்பட்ட நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக வாக்குறுதி அளித்து நிதி மோசடி செய்திருப்பதும் தெரிய வந்துள்ளது. அவர்கள் 30 மில்லியன் ரூபாய் நிதியை மோசடி செய்ததாக செய்யப்பட்ட வழக்குக்கு அமைய ஏறாவூர் நீதிமன்றத்தால் குறித்த கணவ னுக்கு எதிராக 16 பிடியாணை களும், மனைவிக்கு எதிராக 16 பிடியாணைகளும் ஆக 32 பிடியா ணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த தம்பதியினர் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி வவுனியா, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைந்திருந்த நிலையில் வவுனியா பொலி ஸாருக்கு கிடைத்த தகவலை யடுத்து சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண விஜெயமுனி அவர்களின் வழிகாட்டலில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் சிறப்பு தனிப்படை பொலிஸார் தோணிக்கல் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு குறித்த தம்பதி யினரை செவ்வாய்க்கிழமை (21) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 55 வயதும் அவரது மனைவி 48 வயதும் உடையவராவார். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்திய நிலையில 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# யாழ். பல்கலையில் 'த நெயில்' சஞ்சிகை வெளியீடு



(பு.கஜிந்தன்)

யாழ். பல்கலைக்கழக பொறி யியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியில் உருவான 'த நெயில்' (The Nail) சஞ்சிகை வெளியீடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை (23) இடம் பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குண ராஜா சிறப்பு விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி, பண்பாட் லுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் றஞ்சன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர்,

முன்னைய காலங்களில் பொறியியலாளர்கள் பலர் இந்த மாகாணத்துக்காக அர்ப்பணிப்புடன் உழைத்திருந்தாலும் அவர்களின் அந்தக் கடின உழைப்புப்பற்றி எந்தவொரு ஆவணங்களும் எங்களிடம் இல்லை.

குறிப்பாக நாங்கள் அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்ற அடிப்படையில் ஆறு முகம் திட்டம் தொடர்பில் பேசி வந்தாலும், அது தொடர்பில் முறை யான – முழுமையான ஆவணங் கள் எங்களிடம் இல்லை.

ஆனால் தற்போது வெளியிடப் படும் 'த நெயில்' சஞ்சிகை ஊடாக பொறியிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அனுபவங்களை அவை வருக்கும் பகிரப்படுகின்றது. இது சிறப்பான முயற்சி, பாராட்டப்பட வேண்டியது.

சவால்களை எதிர்கொள்ளா விட்டால் எங்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. சவால் களை எதிர்கொள்ளும்போதுதான் அந்தச் சவால்களை நாங்கள் வெற்றி கொள்கின்றோம். அதன் ஊடாக எங்கள் ஆளுமைகளை மேலும் விருத்தியடையச் செய்து கொள்ளலாம். மிகப்பரந்துபட்ட அனுபவமானது எழுத்து மூலமான போதனையைவிட மேம்பட்டது.

மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனைக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களுடைய ஆக்கங் களையும் இந்த சஞ்சிகையில் உள் வாங்கியமை சிறப்பம்சமாகும். புத்தக கல்விக்கு அப்பால் பரிசோதனைகள் – பயிற்சிகள் மாணவர்களுக்கு முக்கியம். அது இல்லாமல் அவர்களது அறிவு முழுமையடையாது, என ஆளுநர் குறிப்பிட்டார்.

# 'திருவள்ளுவர் கலாசார மையம்' விவகாரம்

## இந்திய துணை தூதரகத்திற்கு சீ.வீ.கே.சிவஞானம் கடிதம்

(ரகுபரன்)

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் (22) புதன்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் இந்திய துணை தூதுவர் சாய்முரளியைச் சந்தித்து தமிழரசுக் கட்சி சார்பில் கட்சிப் பதில் தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் கடிதம் ஒன்று சமர்ப்பித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண திறந்த வெளி அரங்கு அமைந்திருந்த யாழ்ப்பாண மாநகர சபைக்கு உரித்தான காணியில் அதற்குப் பதிலாக இந்திய மத்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட "யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்" 2023ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாநகர சபையின் நிதி வசதியீனத்தைக் காரணம் காட்டி அவ்வாறு செய்யப்படாமல் சில முக்கிய அரசியல் காரணங்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்தக் கட்டடம் அதன் முழுமை யான அம்சங்கள் ஆராயப்படாமல் நிர்மாணிக்கப்பட்டமையே இந்த நிலை உருவாகக் காரணமாகியது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறிருக்கையில் கடந்த 18.01.2025ஆம் திகதி சனிக்கிழமை இதன் பெயர் "திருவள்ளுவர் கலாசார மையம்" என மாற்றப்பட்டாக இலங்கையின் பிரதி கலாசார அமைச்சரும் இலங் கைக்கான இந்திய தூதுவரும் வேறு சிலரும் கலந்துகொண்ட சந்திப்பில் பெயர் மாற்றத்துடனான பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின் அரசியல் தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை என்பது எமக்கு மிகவும் ஆச்சரியத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்தியுள் ளது என்பதைத் மிகுந்த கவலை யுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நடவடிக்கை பற்றிய ஆழமான அதிருப்தி உள்ளது என்பதை மட்டும் குறிப்பிட்டு, இது ஒரு இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையேயான உணர்வுபூர்வமான விடயம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்பு கிறோம். அதனால் விபரமாக அதிருப்தியை பதிவு செய்வதை தவிர்க்கிறோம்.



தெய்வப் புலவர் ஐயன் திருவள்ளுவருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ஔவைக் கும், மகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் நாமாக இங்கு சிலை எடுத்தவர்கள் நாங்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இப்படியிருக்கையில் இலங் கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான "யாழ்ப்பாணம்" என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித் ததற்கு சமமாகும். இது இந்தியாவுக் கும் எமக்குமிடையேயான நல்லுற வில் ஆழமான குழியாக அமைந்து விடக்கூடாது என நாம் திடமாக நம்பு கிறோம்.

"யாழ்ப்பாணம்" என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம். மேலும் இந்த புதிய பெயர் மாற்றத்திற்கான அறிவித்தலில் கூட தமிழ் மொழி மூன்றாமிடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமையைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. இலங்கை அரசின் அரசமைப்பின் 16ஆவது இலக்க திருத்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகும்.

சிங்களம் அடுத்த நிர்வாக மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்பது அரசியலமைப்பின் ஏற்பாடாக இருக்கையில் சிங்கள மொழியில் முதலாவதாகவும் ஆங்கில மொழியில் இரண்டாவ தாகவும் தமிழ் மொழியில் மூன் றாவதாகவும் பெயர்ப் பலகை எழுதப் பட்டிருப்பது இந்த ஏற்பாடுகளை மீறும் செயலாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பல்வேறு தரப்பினருடனும் கலந் துரையாடிய பின்பே நல்லுறவைப் பாதிப்பின்றி பேணும் பொருட்டு இந்த மீளாய்வுக் கோரிக்கை சமர்ப் பிக்கப்படுகின்றது. என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களது துரிதமான செயற் பாட்டிற்கு நன்றியுடையவராவோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

# காலத்தின் கவிஞன் கவிக்கோ அப்துல் ரஹ்மான்



புதுக்கவிதைத் துறையில் தன்னை வேகமாக நிறுவிக் கொண்ட அப்துல் ரகுமானின் படைப்புலகம் விரிந்துபட்டது. மிகக் காத்திரமான கட்டுரைகளையும், இரசனைமிக்க பத்திகளையும் தமிழ் உலகிற்கு வழங்கியதில் கவிக்கோவின் பங்கு அளப்பரியது. பால்வீதி எனும் கவிதைத் தொகுப்பின் ஊடாக இலக்கிய உலகில் பிரசவித்த கவிக்கோவின் வளர்ச்சியானது, பலருக்கு முன்னோடி ஆசிரியனாக உருவாகியிருப்பதில் நிலை கொண்டது. உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் போன்றவற்றின் போக்கோடு கவிக்கோ அமைத்த படைப்புலகம் மிக விசித்திரமானது. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்று வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் பணியாற்றினார். விரிவுரையாளராக, பேருரையாளராக, பேராசிரியராக தன்னுடைய பணிகளில் கவிக்கோவின் பயணம் வெகு காத்திரமாகவே இருந்தது. தமிழ் நாட்டின் வக்பு வாரியத் தலைவராக 2009 முதல் 2011 வரை பணியாற்றினார். பால்வீதி, நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை, அவளுக்கு நிலா என்று பெயர், முட்டைவாசிகள், மரணம் முற்றுப்புள்ளி அல்ல, விலங்குகள் இல்லாத கவிதை, சொந்தச் சிறைகள், புதுக்கவிதையில் குறியீடு, சுட்டுவிரல், கம்பனின் அரசியல் கோட்பாடு, ஆலாபனை, பித்தன், விதைபோல் விழுந்தவன், முத்தமிழின் முகவரி, பூப்படைந்த சபதம், தொலைபேசிக் கண்ணீர், காற்று என் மனைவி, உறங்கும் அழகி, நெருப்பை அணைக்கும் நெருப்பு, பசி எந்தச் சாதி, நிலவிலிருந்து வந்தவன், கடவுளின் முகவரி, முத்தங்கள் ஓய்வதில்லை. காக்கைச் சோறு, சோதிமிகு நவகவிதை, மின்மினிகளால் ஒரு கடிதம், தாகூரின் சித்ரா, இரகசிய பூ, சிலந்தியின் வீடு, இது சிறகுகளின் நேரம், இல்லையிலும் இருக்கிறான், பறவையின் பாதை, இறந்ததால் பிறந்தவன், தட்டாதே திறந்திருக்கிறது, எம்மொழி செம்மொழி, பூக்காலம், தேவகானம், கண்ணீர் துளிகளுக்கு முகவரி இல்லை, பாலை நிலா போன்ற ஏராளமான தொகுப்புக்களின் சொந்தக்காரன் கவிக்கோ எழுத்துக்களில் வாழ்ந்த ஒரு படைப்பாளன்.

கவியரசர் பாரிவிழா விருது தொட்டு சாகித்திய அகடமி விருது ஈறாக உமறுப் புலவர் விருது வரை கவிக்கோவின் விருதுலகமும் மிகவும் விரிவானது. சூபியிஸ போக்கிலும், ஹைக்கூ கவிதைகளின் வாழ்விலும், கஸல் பாடல்களின் போக்கிலும் கவிக்கோவின் எழுத்துக்கள் மிக அற்புதமான தடயங்களை பதித்திருக்கின்றன. இம் மாபெரும் கலைஞன் 1973 நவம்பர் மாதம் 9 ஆம் திகதி மதுரை கிழக்கு சந்தைப்பேட்டையில் பிறந்து 2017 ஜூன் 2 ஆம் திகதி தனது 80ஆவது அகவையில் இறையடி சேர்ந்தார். ஓராயிரம் படைப்புக்களின் வாசக மனங்களை இப் புவியில் விதைத்து விட்டு.

# கனவுக் கோட்டை

எல்லோருமாக ஒன்றிணைந்து மங்கோத தேவனை வீழ்த்த முயற்சித்தனர். அதற்காக மங்கோத தேவனின் முதன்மைப் பங்காளியான ராஷ்தோத்தரி பயன்படுத்தப்பட்டான். மங்கோத தேவனை மீறி ராஷ்தோத்தரியை நெருங்க முடியாதிருந்தது. பல வகையில் திட்டமிடப்பட்டும் அனைத்து திட்டங்களும் தோல்வியில்தான் முடிந்தன. அப்பொழுதுதான் சீவராணுகி தனது திட்டத்தினை முன் வைத்தாள். மிகவும் அபாயகரமான திட்டங்களை தீட்டுவதில் அவள் திறமையானவளாக இருந்தாள்.

சீவராணுகி தேசத்தினை ஆண்ட போது முஸப்பரிகளின் உன்னதமான தலைவனாக கருதப்பட்ட மாஸ்ஹரப் வேட்டையாடி கொல்லப்பட்டான். அவனுடைய உடம்புகள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. முஸப்பரிகளின் வாழ்வில் மறக்க முடியாத பெரும் தழும்பாக அந் நிகழ்வு தோற்றம் கொண்டது. அன்றிலிருந்தே முஸப்பரிகள் பல கோத்திரங்களாக பிளவுபட்டனர். அப்பிளவுகள் தாமிரங்கர்களுக்கும், சிங்கமேரிகளுக்கும் பெரும் சந்தர்ப்பங்களை வழங்கின. முஸப்பரிகளின் தலைவரான மாஸ்ஹரப் தோற்றத்தில் மிகவும் அழகானவன். அவனை எல்லோரும் தேசத்தின் பிதாவாகவும், அவனுடைய வாக்கே இறுதியாக்கப்பட்ட வாக்கெனவும் நம்பினர். அவனின் படு கொலைக்குப் பின்னர் முஸப்பரிகளின் அதிகாரப் போக்குகள் தேசம் முழுக்க செல்வாக்கற்றுப் போயின.



சீவராணுகி மிக நுணுக்கமான திட்டமொன்றினை அரங்கேற்றினாள். மங்கோத தேவனானவன் தன்னை விடவும் மிகைப்படுத்தி நம்புகின்ற மந்திரக்காரனை தங்களது வசப்படுத்த வேண்டும் எனவும், அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளும் படியும் ரோணல் மோசங்கேவிற்கு கட்டளையிட்டாள். அவனும் தன்னுடைய நிறைவேறப் போகும் நீண்ட நாள் கனவினை நினைத்து ரங்கோலா ஆட்டங்களை ஆடிக் கொண்டிருந்தான். அவனுடன் பலரும் சேர்ந்து ஆட்டங்களைத் தொடர்ந்தனர். திட்டமிடப்பட்ட ஒரு நாளில், மங்கோத தேவனின் நம்பிக்கைக்குரிய மந்திரக்காரன் ரோணல் மோசங்கேவின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டான்.

தூர தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட மதுபானங்களும், பொற்காசுகளும் மந்திரக்காரனான சாமு குரூஸிற்கு வழங்கப்பட்டன. மங்கோத தேவனின் அதிகாரத்தினை வீழ்த்துவதற்கும், தேசத்தினை கைப்பற்றுவதற்கும் முழு ஒத்துழைப்பினை வழங்குவதாக மந்திரவாதி சாமு குரூஸ் கூறினான். அவனுடைய பேச்சில் சாம்ராஜ்ஜியத்தினை கைப்பற்றியதாகவே உணர்ந்தான் ரோணல் மோசங்கே. அவனின் கனவுக் கோட்டை மிக நெருக்கமாக கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒருவன் முத்தாரம்




ஏ.எம். சாஜித் அஹமட்

# வரலாறுகளின் படைப்புலகம் தஸ்தயேவ்ஸ்கி கதைகள்

உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற செயற்பாட்டினைத்தான் இலக்கியம் என்கிறோமா என்பதில் வாதப் பிரதிவாதங்கள் இருந்தாலும் இலக்கியமானது தனது போக்கினை ஏதோ ஒரு அமைப்பில் மனித வாழ்வினூடாகவும், யதார்த்தங்களை தாண்டிய அண்டவெளி சமாச்சாரங்களின் வழியாகவும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. அவ்வகையான இலக்கிய போக்கிற்கு தனித்த வழியமைப்பினை அடையாளமாகக் கொண்ட காத்திரமான எழுத்தாளன் தஸ்தயேவ்ஸ்கி எனலாம். ரஷ்ய மொழி எழுத்தாளரான இவரின் படைப்புகள் தமிழ் சூழலில் பல மெகா ஹிட் எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறது.

சாரு நிவேதிதா, எஸ். ராமகிருஷ்ணன் போன்றவர்களின் எழுத்துக்களில் தஸ்தயேவ்ஸ்கி இடைவிடாது பயணிப்பார். இளம் பருவத்திலிருந்தே இலக்கியம் மீது அதிக ஆர்வம் கொண்ட தஸ்தயேவ்ஸ்கி நாடகங்கள், கலை நிகழ்வுகள் மீதும் தன்னுடைய அதிக அக்கறையினை காட்டினார். 1840 ஆம் ஆண்டு இவருடைய முதல் நாவலான ஏழை மக்கள் இலக்கிய உலகினுல் பெரும் கதையாடலினை ஏற்படுத்தியது. ரஷ்யாவின் மிகப் பிரபல்யமான நிகழ்வாக நடைபெற்ற ஷபீத்தர்புர்க் இலக்கிய கூட்டங்களில் இந் நாவல் பற்றிய காரசாரமான விவாதங்கள் இடம் பெற்று தஸ்தயேவ்ஸ்கி எனும் அடையாளம் வேரூன்றி இலக்கிய மண்ணில் பதிந்தது எனலாம்.

எழுத்தாளனாக மட்டும் தன்னுடைய வாழ்வியலை முடித்துக் கொள்ளாமல் தான் எழுதுகின்ற எழுத்துக்களை செயற்படுத்துகின்ற செயற்பாட்டாளனாகவும் தஸ்தயேவ்ஸ்கி செயற்பட்டார். பெத்ரஷ ஙவ்ஸ்கி லிபரல் இலக்கியவியல் கழகத்தில் 1849ஆம் ஆண்டு ஈடுபட்டமைக்காக தஸ்தயேவ்ஸ்கிற்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு பின்பு அது நான்கு வருட சைபீரியக் கடுங்காவல் தண்டனையாக மாற்றப்பட்டது. தஸ்தயேவ்ஸ்கியுடைய படைப்புகள் மனித அவலங்களையும், அதிகார நெருக்கடி நிலைகளை கட்டுடைப்பு செய்வதாகவும் அமைந்திருந்தது. இவருடைய The Brothers Karamazov நாவலை அரும்பு சுப்பிரமணியன் ரஷ்ய மொழியிலிருந்து நேரடியாக தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். படைப்புக்களின் காத்திரம் என்பது அவை சமூக மையங்களுடன் ஊடறுத்து பல்வேறு கதையாடல்களை உருவாக்கி காலத்தோடு கலத்தல் என்பதே அப்படைப்பின் சுயமரியாதை ஆகும். அதில் வெற்றி கண்ட படைப்பாளிதான் தஸ்தயேவ்ஸ்கி...







# அடுப்பங்கரை சினிமா - Cook

அமெரிக்க இயக்குநரான ரொஸ்கி அர்புக்லியினால் 1918ஆம் ஆண்டு இயக்கப்பட்டு பெரும் வெற்றியினையும், விவாதத்தினையும் ஏற்படுத்திய திரைப்படமே The Cook சமையல் சிந்தனை மரபுடன் கதை சொல்லும் போக்கினை மிக நுட்பமாக நகர்த்தியிருப்பார் இயக்குநர். ஒரு போராட்டத்தினுடைய வலிகளையும், அப்போராட்டம் எதிர்கொள்ளும் எதிர் வினைகளையும், போராட்டத்தின் முடிவினை சரியாகத் தீர்மானிக்கின்ற குழப்பத்திலும் நகர்ந்து செல்கின்ற இத்திரைப்படத்தின் காட்சியமைப்புக்கள் மிக வித்தியாசமானவை. பெண்களுடைய வாழ்வியல் போராட்டத்தின் மீது ஏராளமான கேள்விகளை ஏற்படுத்தும் இத்திரைப்படம் விசித்திரமான கதாப்பாத்திரங்களின் வழியே நகர்த்தப்பட்டிருக்கும்.

இத்திரைப்படத்தில் இயக்குநர் பயன்படுத்தியிருக்கும் நிறம் சார்ந்த அழகியல் மிக விசித்திரமானது. நீலம், சிவப்பு, வெள்ளை என மூன்று வர்ண அமைப்பியலுடன் கதை நகர்த்தப்படுகின்ற ஒளிப்பதிவில் நுகர்வோன் லயித்து விடுவான். குறியீட்டு அடையாளப் பண்புடன் நகர்ந்து வரும் இத்திரைப்படம் வர்ணங்களின் மூலம் கதை சொன்ன படைப்பாகும். இத்திரைப்படத்தின் மிக முக்கியமான வகிபங்கினை இசை வழங்கியிருக்கிறது. இத்திரைப்படத்தின் கதையினை நகர்த்திச் செல்லும் பாத்திரம் இசையோடு பின்னப்பட்ட மாயையாகவே இருக்கும். பெறுமதியான பல விருதுகளையும், நகைச்சுவை சினிமாவிற்கான முன்னோட்டத்தினையும் இத்திரைப்படம் தன்வசப்படுத்திக் கொண்டது. நல்ல சினிமாவிற்கான கதைகளின் அடித்தளங்கள் இவ்வாறே தோற்றம் பெறுகின்றன.

பல்தரப்பட்ட வாசகப்பரம்பலினை அடைந்து கொள்ளாத படைப்புகள் நிலைபெறாமல் போகின்றன. ஒரு சினிமா கற்றுத் தருகின்ற பெரும் அனுபவம் அதுவாகத்தான் இருக்க முடியும். திரைப்படங்கள் என்பவை பொருளாதாரத்தின் பிடியினையும், கதை சொல்லலின் யுக்தியினையும் ஒன்றாக்கிக் கொண்ட நீட்சியான படைப்புலகமாகும். அதனில் நின்று போராடி படைப்புக்களை தரமாக்குவதென்பது எல்லோராலும் நிகழ்த்திவிடக் கூடியதல்ல. அதற்கான பாதையும், கடினமும், பெரும் உழைப்பும் அவசியமாகிறது. The Cook இவ்வகைச் சினிமாக்களில் தனித்தன்மை வாய்ந்தது.

# சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜெயந்தி தின விழா





(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

சுவாமி விவேகானந்தரின் 163 ஆவது ஜெயந்தி தின விழா மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மஹராஜ் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் திருச்சொரூப பவனி கல்லடி உப்போடை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு,பழைய கல்முனை வீதி வழியாகச் சென்று கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியூடாக மீண்டும் இராமகிருஷ்ண மிஷனை வந்தடைந்தது.

அங்கு விசேட பூஜை வழிபாடுகள், பஜனை, சிறப்பு ஆராத்தி என்பன நிகழ்த்தப்பட்டு சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தின விழா அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்புக் கிளையின் உதவி முகாமையாளர் உமா தீஷானந்தாஜீ மஹராஜ் உள்ளிட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஆடு மற்றும் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஆடு மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றை மருதமுனை பகுதியில் களவாடி சம்மாந்துறை பகுதியில் விற்பனை செய்து வந்த சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் புதன்கிழமை (22) இடம்பெற்றுள்ளதுடன் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் சந்தேக நபர்கள் வசம் இருந்து அவர்கள் விற்பனைக்காக கொண்டு வந்த மூன்று ஆடுகள் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் கடந்த 21 ஆம் திகதி மூன்று ஆடுகள் மற்றும் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைய செயற்பட்ட சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் பாடசாலைக்கு பின்பகுதியில் 21 வயதுடைய சந்தேக நபரை கைது செய்தனர். பின்னர் கைதான சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது மற்றுமொரு சந்தேக நபரான 34 வயதுடையவர் சம்மாந்துறை ஹிஜ்ரா பள்ளிவாசலுக்கு அருகாமையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய குடும்பத்திற்கு வாழ்வாதார உதவி

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய குடும்பத்திற்கு வாழ்வாதார சுயதொழில் முயற்சிக்காக இலங்கை அகதிகள் புனர்வாழ்வு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் (oferr Ceylon) ஒபெர் சிலோன் நிறுவனத்தின் உதவியுடன் நவீன தையல் இயந்திரம் செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு அகதிகளாக இந்தியா சென்று அங்கிருந்து மீண்டும் 2023 ஆம் ஆண்டு நாடு திரும்பி மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் உறவினர் வீடு ஒன்றில் வாழ்ந்து வரும் குடும்பத்திற்கே குறித்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.



இலங்கை அகதிகள் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தின் ஆலோசகரும் முன்னாள் மாவட்டச் செயலாளருமான கே. கருணாகரன் ஏற்பாட்டில் தையல் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

# இலங்கைக்கான ஜப்பான் உயர்ஸ்தானிகர் காத்தான்குடி விஜயம்

இலங்கைக்கான ஜப்பான் உயர்ஸ்தானிகர் ஆக்கியோ ஸ்மாட்டா நேற்று முன்தினம்(22) புதன்கிழமை காத்தான்குடிக்கு விஜயம் செய்தார்.

இதன் போது காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆ பள்ளிவாசல் காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளிவாயல், காத்தான்குடி ஜம்இய்யத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி போன்ற இடங்களுக்கும் சென்றிருந்தார்.

1990 ஓகஸ்ட் 3 ஆம் திகதியன்று பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது படுகொலை செய்யப்பட்ட காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு சென்ற உயர்ஸ்தானிகர் அங்குள்ள தடயங்கள், புகைப்படங்களைப் பார்வையிட்டதுடன் படுகொலை செய்யப்பட்ட 103 பேர் அடக்கம் செய்யப்பட்டுள்ள மையவாடிக்கும் சென்று பார்வையிட்டார்.

இதையடுத்து காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த உயர்ஸ்தானிகரை பள்ளிவாசலின் தலைவர் ரஊப் ஏ மஜீத் தலைமையிலான பள்ளி நிருவாகிகள், பிரமுகர்கள் வரவேற்றனர்.



# கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் கடலரிப்பினால் பாதிப்பு

(பாறுக் ஷிஹான்)

கடலரிப்பு காரணமாக கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் எல்லைச் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன.

அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட நிலைமையை தொடர்ந்து கடலரிப்பின் தாக்கம் மிக வேகமாக இப்பகுதியில் ஏற்பட்டுள்ளது.





இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக் களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென பள்ளிவாசல் நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் கல்முனை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசல் பின்புறமாக அமைக்கப்பட்ட தென்னந்தோட்டமும் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன.அங்குள்ள சில தென்னை மரங்களும் முறிந்து விழுந்துள்ளன.இது தவிர அடிக்கடி தற்போது கடல் அலை சீற்றம் காரணமாக இப்பகுதிகள் கடலரிப்பிற்குள்ளாகி பாரிய சேதங்களுக்கு உள்ளாகி வருகின்றன.

# பொலிஸாரால் பயன்படுத்தப்பட்ட பொது கட்டிடம் கையளிப்பு

எஸ்.கீதபொன்கலன்

மூதூர் – மேன்காமம் பொலிஸ் நிலையத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த மேன்காமம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் பல வருடங்களுக்குப் பின்னர் புதன் கிழமை(22) பொலிஸா ரால் மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

சுமார் 15 வருடங்களாகக் குறித்த கட்டடத்தில் எவ்வித கொடுப்பனவுகளும் இன்றி மேன்காமம் பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது. இது தொடர்பாகக் கடந்த 17.01.2025 அன்று இடம்பெற்ற மூதூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனால் கட்டடத்தை மக்களின் பாவனைக்கு வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த கட்டடமானது தாய்–சேய் பராமரிப்பு நிலையம், நூலகம் உட்பட மற்றும் ஏனைய பல தேவைகளுக்கென சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவசரமாக பொலிஸ் நிலையத்திற்குக் கட்டடம் தேவைப்பட்டதால் அக்கட்டடம் அப்போது பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. அதில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் வசித்து வந்தார்கள். இதனால் மக்கள் தங்களது தேவைகளுக்காக பொதுக் கட்டடமின்றி சிரமப்பட்டு வந்தார்கள். அத்துடன் குறித்த கட்டடத்தை மீள வழங்கக்கோரி கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மக்கள் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் அது வழங்கப்படவில்லை.



இந்நிலையில் சண்முகம் குகதாசன் எம்.பியினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் எழுத்து மூலமாக பொலிஸ் மா அதிபர் உட்படச் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்

# கல்முனை, அக்கரைப்பற்றில் திரையிடப்படும் ஓட்டமாவடி ஆவணப்படம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

“ஓட்டமாவடி: சொல்லப்படாத கதைகள்“ (Oddamavadi: The Untold Story) என்ற ஆவணப்படம் கல்முனை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பின்வரும் திரையரங்குகளில் (24) இன்று வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து திரையிடப்படுகின்றது.

கல்முனை ஜீ.கே. திரை அரங்கில் இன்று மாலை 2.30 மணிக்கும் அக்கரைப்பற்று அர்ச்சனா திரை அரங்கில் மாலை 5.00 மணிக்கும் இரு காட்சிகளாகத் திரையிடப்படுகின்றது.

கொரோனா தொற்றில் உயிரிழக்கும் அனைவரது உடல்களையும் கட்டாய தகனம் செய்யும் கொள்கையை இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்ததுடன், இஸ்லாமிய நம்பிக்கைகளின் படி இறந்தவர்களை அடக்கம் செய்யும் கொள்கைக்கு அது எதிராகவும் அமைந்திருந்தது. இவ் ஆவணப்படம் இது தொடர்பிலான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் ஆவணப்படம் அனைவரும் விழிப்புணர்வு பெறவேண்டிய வகையில் எடுக்கப்பட்டுள்ளதால், இதனைக் கட்டாயம் அனைவரும் பார்ப்பதன் மூலம் படிப்பினை பெற வேண்டிய பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

இவ் ஆவணப்படம் பொதுமக்கள்






ரோஹிங்கிய அகதிகளை நாடு கடத்தும் தீர்மானத்தை இலங்கை அரசு மீள்பரிசீலனை செய்ய வலியுறுத்தும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று அண்மையில் ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஜாமிஉல் ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

படங்கள் எம்.பஹுத் ஜுனைட்

# பிறைந்துரைச்சேனை கொலை; சந்தேக நபர் கைது

(ருத்ரா)

பிறைந்துரைச்சேனை சாதுலியா வித்தியாலய வீதியைச் சேர்ந்த சீனி முஹம்மது முஹம்மது முஸம்மில் எனும் 41 வயதுடைய தனது மூத்த சகோதரனை குத்திக்கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் தம்பியை வாழைச்சேனை பொலிஸார் நேற்று (23) பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் கைது செய்துள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெருங்குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பெருங்குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சம்பத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(எம்.பஹுத் ஜுனைட்)

காத்தான்குடி சமூக நலனுக்கான அமைப்பின் (MSW) ஏற்பாட்டில் தொடர்ச்சியாக 10ஆவது வருடமாக இவ்வருடமும் “வறுமை கல்விக்குத் தடையல்ல” எனும் தொனிப்பொருளில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களில் உள்ள 32 பாடசாலைகளைச் சேர்ந்த 925 மாணவர்களுக்கும் காத்தான்குடி, ஆரையம்பதி பிரதேச சபைகளுக்குட்பட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவுகளினால் தெரிவு செய்யப்பட்ட 79 மாணவர்களுக்குமாக மொத்தம் 1004 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# மீண்டும் அதிகரித்துள்ள அரிசி விலை செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வர்த்தகர்கள்





(பாறுக் ஷிஹான்)

அரிசி வகைகளுக்கான செயற்கை தட்டுப்பாட்டை வர்த்தகர்கள் சிலர் மேற்கொள்வதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று, மாநகர சபைகள் உள்ளிட்ட சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், நாவிதன்வெளி, உகண மகாஓயா, பதியத்தலாவ, தெகியத்தகண்டிய, தமண, நாமல்ஓயா, ஆலையடி வேம்பு, லகுகல, பகுதிகளில் அரிசி வகைகளுக்கான தட்டுப்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அரிசி வகைகளை நுகர்வோர் பெற்றுக்கொள்ள முயற்சி செய்த போதிலும் வர்த்தர்கள் சிலர் அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதுடன் அதிக விலைக்கு தற்போது அரிசியை கொள்வனவு செய்ததாக கூறி அதிகளவான விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

மேலும் சில வர்த்தகர்கள் அரிசி வகைகளை பதுக்கல் செய்வதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

மேலும் சில அரிசி ஆலைகள் வர்த்தக நிலையங்கள் அரிசி விடயத்தில் மாபியா இரகசியங்கள் பேணி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தவிர அரிசி விற்பனை செய்யும் போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது மேலதிக கட்டணங்கள் அறவிடுவது அரிசி வகைகளை பதுக்கி வைப்பது தொடர்பாக பொது மக்களினால் பல்வேறு முறைப்பாடுகள் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறான அரிசி தட்டுப்பாடுகள் இடம்பெற்ற போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியசாலை வர்த்தக நிலையங்கள் மற்றும் அரிசி களஞ்சியசாலைகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தினுடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரிசி தட்டுப்பாட்டிற்கு மத்தியில் சில வர்த்தகர்கள் கையிருப்பில் உள்ள அரிசி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் நுகர்வோரால் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை அவ்வப் போது அதிகரிப்பதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியா மல் தவிப்பதாக அரிசி மொத்த வியா பாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரிசியின் மொத்த விலையை மீண்டும் உயர்த்தியுள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளதுடன் நாட்டு அரிசி சம்பா மற்றும் கீரி சம்பா ஆகிய அரிசிகளின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மானிப்பாயில் 330 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது



(பு.கஜிந்தன்)

உடுவில் பிரதேசத்தில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று மானிப்பாய் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு பெருமளவிலான கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களும் நேற்று (23) கைப்பற்றப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பொலிஸ் சிறப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி G.J.குணதிலக தலைமையிலன விசேட பிரிவினரால் இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

உடுவில் பிரதேசத்தில் மல்வம் பகுதியில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முற்றுகையின் போது 330லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள், தயாரிக்க பயன்படுத்தும் சில உபகரணங்கள் உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் 39 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கோடா, கசிப்பு மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் நீதிமன்றில் முன்நிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்த வருடத்திற்குள் பெருந்தோட்ட மக்களுக்கான 4350 புதிய வீடுகள்




(பு.கஜிந்தன்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தோட்ட மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 2025 ஆண்டிற்குள் 4350 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு பெருந்தோட்ட மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து அவர்களை வறுமை நிலையிலிருந்து மீட்டெடுப்பது அரசாங்கத்தின் பிரதான நோக்கமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தோட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை தங்களது அரசியல் நட்பு வட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது எனவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இப் புதிய வீடுகள் தோட்ட புறங்களில் வாழும் உரிய பயனாளிகளுக்கு மாத்திரம் வழங்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சில் கடந்த திங்கட் கிழமை (21) அரசாங்கத்தினால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பெருந் தோட்ட நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்திருந்தார்.

மேலும் குடிசன புள்ளி விபர மதிப்பீடுகளுக்கு அமைய 83.75வீதமானோர் இலங்கையில் சொந்த குடியிருப்புக்களில் வாழ்ந்து வருவதோடு அதில் 5.6வீதமானோர் தோட்ட புறங்களை சார்ந்தவர்களாவர்.

இது மிகவும் ஒரு குறைந்த எண்ணிக்கையாகும். இலங்கையின் வாழும் சமூக கட்டமைப்பின் படி வறுமையானோர் 11.9வீதம் ஆவார். அதிலும் பெருந்தோட்ட பகுதியில் 29.7வீதமானோர் வறுமை கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் தோட்ட புறங்களில் வாழும் மக்களை வறுமையிலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கான வீட்டு பிரச்சினைக்கான விரைவான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுப்பது எமது தலையாய கடமையாகும் 10,000 இந்திய உதவி வீட்டுத் திட்டத்தின் கீழ் 1,300 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் 2025 ஆண்டு முடிவதற்குள் 4,350 வீடுகளும் 2026 வருடத்தினுல் மேலும் 4,350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு தோட்ட மக்களுக்கு அவ் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலின் போது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன அவர்களும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ அவர்களும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி அவர்களும் அரசாங்கத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேச பெருந் தோட்ட கம்பனிகளின் மேல் மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

# கிளிநொச்சி வர்த்தகர்களின் அடையாள கண்டன பேரணி






(பு.கஜிந்தன்)

கிளிநொச்சியில் அனுமதியின்றி வியாபாரத்தில் ஈடுபட்டுபவர்களுக்கு எதிராக வர்த்தக சங்கத்தினர் தமது வர்த்தக நிலையங்களை மூடியபடி நேற்று (23) ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வர்த்தகர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் ஆகிய நாங்கள் வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தரும் வியாபாரிகள் எந்தவித அனுமதியும் பெறாமல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் மெகா சேல்ஸ் என கூறி கிளிநொச்சி மாவட்டத்தின் நகர வர்த்தகர்களின் வியாபாரத்திலும் அவர்களது வாழ்வாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர்.

எனவே உடனடியாக இவர்களை இப்பகுதியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இதன் போது மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிக்கையில், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்று தருவதாக கூறினார்.

# அனுராதபுரத்தில் திடீரென தீ பிடித்த மோட்டார் சைக்கிள்



(எம்.ரீ.ஆரிப்)

அனுராதபுரம் ஆயுர்வேத வைத்திய சாலைக்கு முன்பாக நேற்று (23) வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்ததில் மோட்டார் சைக்கிள் முற்றாக சாம்பராகியுள்ளது.

இளைஞர் ஒருவர் பயணித்த எலக்ட்ரிக் சார்ஜிங் மோட்டார் சைக்கிளே தீப்பிடித்து எரிந்த நிலையில் இளைஞன் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே இறங்கி தனது உயிரைக் காப்பாற்றிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது வீதியில் சென்று கொண்டிருந்த தனியார் தீய ணைப்பு நிலையத்தை நடத்தும் நபர் ஒருவர் முதலில் தீயை அணைக்க முயன்றதாகவும் பின் னர் அனுராதபுரம் தீயணைப்புத்துறையினர் தீயை அணைத்த போதும் மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ரெலிகொம் வயர் மீது விழுந்த பனை மரம்



வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பனை மரம் ஒன்று ரெலிகொம் வயர் மீது முறிந்து விழுந்துள்ளது.

நீண்ட நாட்களாக வீதியின் அருகே ரெலிகொம் வயர் மீது விழுந்து காணப்படும் இந்த பனை மரத்தை அகற்றும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

சம்பவம் தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலர், ரெலிகொம் உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மரம் விழுந்து இருப்பதால் அதன் பக்கம் உள்ள மின் கம்பங்கள் விழும் அபாயத்தில் இருப்பதுடன் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# வெற்றிலைக்கேணியில் இலவச பற் சிகிச்சை முகாம்



(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் இலவச பற் சிகிச்சை முகாம் நேற்று (23) வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கை கடற்படையின் சேவா வனிதா பிரிவு மற்றும் கடற்படை பல் சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடனும், 'குட் நெய்பர்ஸ் பவுண்டேசனின்' ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

குறித்த பற் சிகிச்சை முகாமில் பாடசாலை மாணவர்கள் முள்ளியான் பொது மக்கள், ஆசிரியர்கள் என பலரும் தமது பற்களை பரி சோதித்து, வைத்திய ஆலோசனைகள் மற்றும் ஆரம்ப சிகிச்சை என்பவற்றை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 8ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் 03.02.2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

கைதுசெய்யப்பட்ட 10 மீனவர்களது வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சிறைச்சாலை அதிகாரிகளால் மீனவர்கள் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டடனர்.

இதன்போது நீதவான் நளினி சுபாஸ்கரன் இவர்களது விளக்கமறியலை 03-02.2025 வரை நீடித்து உத்தரவிட்டார்.

இவர்களிடமிருந்து 1 படகும் கடற்படையால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




கல்கமுவ மொன்னங்குளம் அல் ஹஸனாத் பாலர் பாடசாலையின் 2025 ஆண்டுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு ஆசிரியை எஸ்.எச்.என்.மினா தலைமையில் நடைபெற்றது.

படம் எம்.ரீ.ஆரிப்

# கண்டி தர்மராஜா வித்தியாலய ஆரம்ப பிரிவின் 'Variety show' இடைநிறுத்தம்

## பணம் வசூலித்ததாக பொற்றோர் புகார்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி தர்மராஜா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவினால் இன்று (24) நடைபெறவிருந்த வருட இறுதிக்கான பல்வகை நிகழ்ச்சி (Variety show) தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

அரச பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தைத் தவிரப் பெற்றோரிடம் பணம் அறவிடக்கூடாது எனக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ள போதிலும் உரியச் சுற்றறிக்கைகளை மீறிக் கண்டி தர்மராஜ வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவினால் மாணவர்களிடம் பணம் வசூலித்து நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருட இறுதி பல்வகை நிகழ்ச்சியே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியை இன்று (24) கண்டி தர்மராஜா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்ததுடன், தர்மராஜா கல்லூரியின் முன்னாள் அதிபர் கமல் ஆரியசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.

பல்வேறு நிகழ்ச்சியின் போது முன்னாள் அதிபருக்குப் பரிசில்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆரம்ப பிரிவின் ஒரு வகுப்பிலிருந்து 3000 ரூபா அறவிடப்பட்டதாக மாகாண கல்வி அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதற்கு மேலதிகமாக முதலாம் வருடத்தில் பிள்ளைகளைச் சேர்த்த பெற்றோரிடம் பணம் வசூலிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் மத்திய மாகாண கல்வி செயலாளர் மதுபானி பியசேன, மாகாண கல்வி பணிப்பாளர் நிஹால் அழககோன், சிரேஷ்ட உதவி செயலாளர் (கல்வி) பிரபாத் மத்துமாராச்சி நேற்று முன்தினம் (22) அது தொடர்பான கலந்துரையாடலையும் நடத்தியுள்ளார்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவின்படி, விசாரணை நடத்தி உண்மைகளை ஆராயும் வரை, தர்மராஜா கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் வருட இறுதியில் நடைபெறவிருந்த பல்வகை நிகழ்ச்சியைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் புதிய அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். .

நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய ஆரம்பப்பிரிவு பிள்ளை ஒருவரிடம் அந்த திணைக்களத்தின் உதவி அதிபர் 10000 ரூபாவை வசூலித்ததாகச் சுட்டிக்காட்டிய பெற்றோர்கள் குழு இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.





தெற்காசியத் தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மத்திய மாகாண அரச சேவையின் ஒரே விளையாட்டு வீராங்கனையான ஒனிகா பெர்னாண்டோவை கௌரவிக்கும் நிகழ்வு கண்டி பல்லேகலையில் உள்ள மத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் மேற்படி திணைக்கள ஆணையாளர் சமிலா அத்தபத்து தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

(படங்கள் : எம்.ஏ.அமீனுல்லா)

### ரயில் இ-டிக்கெட் மோசடி

# கண்டியில் கைது செய்யப்பட்டவர் குற்றப்புலனாய்வு பிரிவில் ஒப்படைப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

கொழும்பு கோட்டையிலிருந்து எல்ல நோக்கி பயணித்த ஒடிஸி ரயிலின் இ-டிக்கெட்டுகளை கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கண்டி முச்சக்கரவண்டி சாரதி குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் நேற்று (23) ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் குறித்த சந்தேக நபர் இடமிருந்த கடந்த ஆறு மாதங்களில் அதிக கட்டணத்தில் ரயில்வே இ-டிக்கெட்டுகளை வாங்கியவர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய புத்தகம் மற்றும் கைத்தொலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சந்தேக நபர் 400 ஆசனங்களுக்குரிய 125 சீட்டுகளை விற்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் வழங்கிய தகவலின்படி, புகையிரத திணைக்களத்தின் பல ஊழியர்களும் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் முச்சக்கரவண்டி சாரதியை அதன் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் திலக் சமரநாயக்க உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் (22) பிற்பகல் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

# லக்ஷபான தோட்டத்தில் சிறுத்தையின் சடலம் மீட்பு

(க.கிஷாந்தன்)



நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஷபான தோட்டம் வாழமலை பிரிவில் உள்ள தேயிலை மலையில் நேற்று முன்தினம் சுமார் நான்கு அடி நீளமான உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த தோட்ட மக்கள் வழங்கிய தகவலையடுத்தே குறித்த சிறுத்தை சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்த சிறுத்தை விஷ உணவு உட் கொண்டு உயிரிழந்துள்ள அல்லது எவரேனும் கொன்றுவிட்டனரா? என்பது தொடர்பாக நல்லதண்ணி பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன் உடலில் காயங்களும் காணப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சிறுத்தையின் சடலத்தை நல்லதண்ணி வனஜீவராசிகள் எடுத்துச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# இந்தியப் பிரஜையின் பயண பொதியைத் திருடியவர் கைது

(க.கிஷாந்தன்)

ரயிலில் பயணித்த இந்தியப் பிரஜை ஒருவரின் பயணப் பொதியைத் திருடியதாகச் சந்தேக நபர் ஒருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த இந்தியப் பிரஜை ஒருவரின் பயணப் பொதியைத் திருடிய சந்தேக நபர் ஒருவர் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் (22) கைது செய்யப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். உடரட மெனிகே ரயிலின் மூன்றாவது பெட்டியில் பயணித்த இந்தியப் பிரஜையின் பயணப் பொதியை, இங்குருஓயா மற்றும் கலபட ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் குறித்த சந்தேக நபர் திருயுள்ளார். பின்னர் காணாமல் போன பயணப் பொதி குறித்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ததையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேக நபரைக் காணாமல் போன பயணப் பொதியுடன் கைது செய்து, அவரை ஹற்றன் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஹற்றன் பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபர் மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், அவர் கண்டியிலிருந்து ஹற்றனுக்கு ரயிலில் பயணிக்க ரயில் டிக்கெட் பெற்றிருந்துள்ளதாகவும் தெரிவித்தனர். அண்மைக்காலமாக மலையக ரயில் பாதையில் இயக்கப்படும் பயணிகள் ரயில்களில் இதுபோன்ற திருட்டுகள் அடிக்கடி நடப்பது குறித்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக ஹற்றன் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### பெருந்தோட்டக் கைத்தொழில்

# நிறுவனங்களுடன் அமைச்சர் குழு கலந்துரையாடல்



பெருந்தோட்டக் கைத்தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று செவ்வாய் (21) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் உயர் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பக்கட்ட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது நிறுவனங்களின் தற்போதைய நிலை,தேசிய வேலைத்திட்டத்தின் போது அவர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், நிறுவனங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஹற்றன் ஓயாவில் மாணிக்கக்கல் அகழ்வு; நால்வர் கைது

(க.கிஷாந்தன்)

ஹற்றன் ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகாவலி ஆற்றிற்கு நீர்வழங்கும் ஹற்றன் ஓயாவில் பெரிய குழிகளை தோண்டி, அனுமதி இல்லாமல் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட நான்கு சந்தேக நபர்கள், ஹற்றன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் ஓயாவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஒரு குழு மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக ஹற்றன் பொலிஸ ாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் அங்குச் சோதனை நடத்தப்பட்டு, சந்தேக நபர்களைக் கைது செய்ததோடு, மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களைக் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பலாங்கொடை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் 30-50 வயதுக்குட்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெளிநாடு அனுப்புவதாகப் பண மோசடி செய்தவர் கைது

(எம்.ஏ.அமீனுல்ல)



இத்தாலி மற்றும் ருமேனியா போன்ற நாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி இளைஞர்களை ஏமாற்றிப் பல கோடி ரூபா பணத்தை மோசடி செய்த நபரைச் செவ்வாயன்று (21) கண்டி, தலத்துஓயா பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

சந்தேக நபர் தனது வங்கிக் கணக்கிற்குப் பல இலட்சம் ரூபா பணத்தை மாற்றியுள்ளார் எனக் கண்டி, மைலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரினால் தலத்துஓயா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், இது தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

மேலும் சட்டவிரோத செயற்பாடுகள் பல்வேறு பெயர்களில் சில காலமாக இடம்பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது. முறைப்பாடு செய்த நபருக்குச் சொந்தமான அரச வங்கியொன்றில் பேணப்பட்ட கணக்கிற்கு சந்தேக நபர் ஆறுமாத குறுகிய காலப்பகுதியில் கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாவை மாற்றியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முறைப்பாடு செய்தவர் சந்தேகநபரின் நண்பர் எனவும் அவர் கணக்கில் பல இலட்சம் ரூபா பணம் வரவு வைக்கப்பட்டமை தொடர்பிலேயே முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர் வசித்த மயிலபிட்டி ஹத்பேய பிரதேசத்தில் உள்ள வீட்டைச் சோதனையிட்ட போது 346,480 ரூபா பணம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர வெளிநாட்டு வேலை வழங்குவதற்காகப் போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள், இரப்பர் ஸ்டாம்ப்கள், வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகள், இரண்டு கைத்தொலைபேசிகள், சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், மோட்டார் வாகனப் பதிவுத் துறை என்ற போலி ஆவணமும் சிக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் ஹம்பாந்தோட்டை, பிலியந்தலை போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கி சில காலமாக இந்த மோசடியை மேற்கொண்டு வந்துள்ளதுடன் ஹலவத்தை, தியத்தலாவ முதலான பகுதிகளில் தங்கியிருந்து பல்வேறு பெயர்களில் நடமாடியுள்ளதாகவும் பொலிஸ ாருக்கு தகவல் கிடைத்துள்ளது. சந்தேக நபர் தனது கணக்குகளுக்குப் பணத்தை மாற்றவில்லை என்பதுடன், முறைப்பாட்டாளர் மற்றும் பல நபர்களின் கணக்குகளுக்கு அவர் பணத்தை மாற்றியுள்ளதாகச் சந்தேகிக்கக்கூடிய தகவல்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வரும் சந்தேக நபர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்க மற்றும் பொலிஸ் அதிகாரி ஜானகி ஆகியோரின் பணிப்புரையின் பேரில் தலாத்துஓயா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த அப்புஹாமி, உள்ளிட்ட குழு இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

# மத்திய மாகாண ஆளுநர் பிரான்ஸ் தூதுவர் சந்திப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் மற்றும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் திருமதி மேரி நோயல் டூரிஸ் (Mrs Marie Noelle Duris) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று கண்டி ஆளுநர் அலுவலகத்தில் பெற்றது.

இங்கு மத்திய மாகாண ஆளுநருக்கும் பிரான்ஸ் தூதுவருக்கும் இடையில் உயர்கல்வி, கலாசாரம், சுற்றுலா, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று நட்புறவு மற்றும் உறவுகள் தொடர்பில் சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. மேலும், பிரான்ஸ் அரசாங்கத்தின் அனுசரணையுடன் இந்நாட்டின் பொதுப் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்புக் காலம் ஆரம்பமானது

## மு.க.ஸ்டாலின் பெருமிதம்



தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை சார்பில் "இரும்பின் தொன்மை" புத்தகம் வெளியிடுதல், கீழடி திறந்த வெளி அருங்காட்சியகம் மற்றும் கங்கைகொண்ட சோழபுர அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுதல், கீழடி இணையதளத்தினை ஆரம்பித்து வைத்தல் போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி, கீழடி மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்க அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து கீழடி இணையதளத்தினை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு ஆரம்பித்து வைத்துடன், "இரும்பின் தொன்மை" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

அதன்பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கு பேசியதாவது:-

அண்மைக்கால அகழாய்வு முடிவுகள் வாயிலாக தமிழ மற்றும் இந்திய அளவில் மட்டுமல்லாமல் உலகளவில் இரும்புத் தாதுவில் இருந்து இரும்பினைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் தமிழ்நிலப்பரப்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்புக் காலம் ஆரம்பமானது. சுமார் 5,300 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிவியல் அடிப்படையில் நிறுவியுள்ளோம். இது தமிழ்க்கும் - தமிழினத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் - தமிழ் நிலத்துக்கும் பெருமை. அது மாத்திரமன்றி உலக மானுட இனத்துக்கு தமிழ்நிலம் வழங்கும் மாபெரும் கொடை என்றே இதனை நாம் கம்பீரமாகச் சொல்லலாம் என்றார்.

# "அண்டப் புளுகனோடு இனியும் இருக்கப்போவது இல்லை"...

## சென்னையில் திடீரென முளைத்த சுவரொட்டிகளால் பரபரப்பு!




"அண்டப்புளுகனோடு இனியும் இருக்கப் போவதில்லை.. மானங்கெட்ட உன்னோடு இனியும் இருக்கப்போவதில்லை" என்ற வாசகங்களுடன் சென்னை முழுவதும் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசியலையும், சுவரொட்டிகளையும் பிரிக்க முடியாத மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அவ்வப்போது அரசியகளால் சுவரொட்கள் ஒட்டப்படுவது வழக்கம்.

அதேபோன்ற ஒரு நிகழ்வே நேற்று சென்னை முழுவதும் இடம்பெற்றுள்ளது. அதாவது சென்னை முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்களானது தமிழக அரசியல் களத்தையே பரபரப்பாக்கி உள்ளது.

"அண்டப்புளுகனோடு இனியும் இருக்கப்போவதில்லை, மானங்கெட்ட உன்னோடு இனியும் இருக்கப்போவதில்லை" என்ற வாசகங்களுடன், வேறு எந்தக் குறிப்பும் இன்றி சென்னை முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த சுவரொட்டிகளை யார் வடிவமைத்தது, எந்தக் கட்சிப் பொறுப்பாளர் என எந்த ஒரு விவரங்களும் இல்லாத நிலையில் அண்மைக்காலமாக நாம் தமிழர் கட்சியில் இருந்து ஏராளமான நிர்வாகிகள் விலகி வருகின்றனர். நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகும் நிர்வாகிகள், தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது கடும் குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர். இந்த நிலையிலேயே குறித்த சுவரொட்டிளை யார் ஒட்டியது என தெரியாமல் மக்கள் குழம்பி வருகின்றனர்.




# 30 கோடி பெறுமதியான போதைப்பொருள் பறிமுதல்

தூத்துக்குடி கடற்கரை வீதியில் அமைந்துள்ள பழைய துறைமுகம் வழியாக போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்ததையடுத்து பழைய துறைமுகத்திற்கு வரும் அனைவரையும் தீவிரமாக கண்காணிக்க புலனாய்வு துறை உதவி இயக்குனர் முரளி தலைமையில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இதில் நேற்று இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேரை விசாரணை நடத்தியதில் அவர்கள் தோணி மூலம் மாலத்தீவுக்கு



12 கிலோ செறிவூட்டப்பட்ட கஞ்சா போதைப்பொருளை கடத்தவிருந்தது தெரியவந்தது.

இதனுடைய சர்வதேச மதிப்பு ரூ. 30 கோடி என மதிப்பிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த போதைப்பொருள் கடத்தலுக்கு தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் பணிபுரிந்த மத்திய தொழிற் பாதுகாப்புபடை வீரர் மாரிமுத்து உதவியும் தெரியவந்தது.

இதனையடுத்து மேற்படி கடத்தலுடன் தொடர்புடைய தூத்துக்குடி பாத்திமா நகரை சேர்ந்த சுதாகர் (வயது36), ஜேசுராஜ் (34), தோணியின் மாலுமியான கிங்சிலி (56), மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர் மாரிமுத்து ஆகிய 4 பேரை கைது செய்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பிரச்சினையில் விஜய் தலையிடுவது வரவேற்கத்தக்கது



தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், நடிகருமான விஜய் மக்கள் பிரச்சனைகளில் தலையிடுவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என சி.பி.எம் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்தார்.

பரந்தூரில் விமான நிலையம் அமைவதால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும் என்று கூறிய அவர், 2026 சட்டமன்றத் தேர்தல் கூட்டணி நிலைப்பாட்டை எதிர்வரும் ஏப்ரல்மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் முடிவு செய்வோம் என்றும் கூறினார்.

இந்நிலையில் அண்மையில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பரந் தூர் விமான நிலையத் திட்டத்தை எதிர்த்து போராடி வந்த மக்களை சந்தித்தார். நடிகர் விஜய்யின் முதல் கள அரசியல் சந்திப்பாக இது அமைந்தது. இந்த சந்திப்பின் போது விஜய் பேசுகையில், டங்ஸ்டன் திட்டத்திற்கு எடுத்த முடிவினை தான் தமிழக அரசு பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்கும் எடுக்க வேண்டும். எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒரு நிலைப்பாடும், ஆளுங்கட்சியாக இருக்கும் போது ஒரு நிலைப்பாடும் என்று தி.மு.க.வை விமர்சித்த விஜய், நம்பும்படி நாடகமாடுவதில் வல்லவர்கள் என்றும் கடுமையாக சாடினார். அதேபோல் சட்டத்திற்கு உட்பட்டு பரந்தூர் மக்களுடன் எப்போது நானும், இருப்பேன் என உறுதி அளித்தார். இந்நிலையிலேயே விஜய்யின் இவ்வாறான நடவடிக்கைகளை தாம் வரவேற்பதாக சி.பி.எம். மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் மேலும் தெரிவித்தார்.

# பாலியல் குற்றங்களுக்கு தண்டனை: ஸ்டாலினின் திட்டத்துக்கு ஆளுநர் அனுமதி

பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும் அவர்களுக்கு பாலியல் ரீதியாக துன்பம் விளைவித்தலை தடை செய்யும் நோக்கிலும் தமிழக அரசு அங்குள்ள தற்போதைய சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதா மற்றும் மத்திய அரசாங்கம் கடந்த 2023ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டங்களை தமிழகத்துக்கு பொருந்தும் வகையில் திருத்தம் செய்வதற்கான சட்டமசோதா ஆகிய 2 சட்ட மசோதாக்களை தமிழக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார். இதனைத்தொடர்ந்து அந்த மசோதாக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் குரல் வாக்கெடுப்பின்



மூலம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி 12 வயதுக்குட்பட்ட சிறுமியை வன்கொடுமை செய்தால் கடுங்காவல் தண்டனை அல்லது மரண தண்டனை, 18 வயதுக்கு உட்பட்ட பெண்ணை கூட்டு பாலியன் வன்கொடுமை செய்தால் கடுங்காவல் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை, மீண்டும், மீண்டும் குற்ற செயலில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை அல்லது கடுங்காவல் ஆயுள் தண்டனை விதிக்க மேற்கண்ட சட்டமசோதாக்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அசிட் வீசி கொடுங்காயம் ஏற்படுத்தினால் அபராதத்துடன் கடுங்காவல் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை, ஆசிட் வீசுவதாக மிரட்டினால் அபராதத்துடன் 10 ஆண்டுகள் முதல் ஆயுட்கால சிறை தண்டனை விதிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானல் ஏரியில் 6 தொன் மதுபோத்தல்கள் அகற்றம்



மலைகளின் இளவரசியான கொடைக்கானல் நகருக்கு அடையாளமாக விளங்கி வருவது கொடைக்கானல் நட்சத்திர ஏரியாகும். 3 மீட்டர் ஆழம் கொண்ட இந்த ஏரி கடந்த 1863ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது.

கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏரியில் சுற்றிப்பார்ப்பதற்காக படகு சவாரியும் செய்யப்பட்டுள்ளது. 76 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியை சுற்றி 5 மீட்டர் நீளமான வீதி அமைக்கப்பட்டு அதில் நடை பயிற்சியும் மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுலா தலமான கொடைக்கானலில் மதுபானம் அருந்தும் பயணிகளால் வெற்று போத்தல்கள் வீசப்பட்டு வந்தன.

இதனால் சுற்றுச்சூழல் மாசுபடும் நிலை உருவானது. ஆனாலும் அதனை பொருட்படுத்தாத சுற்றுலா பயணிகள் வெற்று போத்தல்களை குளத்திலேயே வீசி வருவதால் அதனை மாநகராட்சி அண்மையில் சுத்தம் செய்தது. இதன்போது 6தொன் வெற்று மதுபான போத்தல்களை குளத்திலிருந்து அகற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தீ விபத்து அச்சம்: இரயிலிருந்து இறங்கி ஓடியபோது விபரீதம்-10பேர் பலி!

மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்த இரயில் விபத்து சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இம்மாநிலத்தின் ஜல்கோவன் மாவட்டத்தில் புஷ்பக் எக்ஸ்பிரஸ் இரயில் சென்றுகொண்டிருந்தபோது இரயில் பெட்டிகளில் தீவிபத்து ஏற்பட்டிருப்பதாக பயணிகள் அச்சமடைந்ததாக கூறப்படுகின்றது. இத் தீவிபத்திலிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள பயணிகள் அபாய சங்கிலியை பிடித்து இழுத்து இரயிலை நிறுத்தியுள்ளனர்.

**புஷ்பக் எக்ஸ்பிரஸ் தீவிபத்து அச்சம்**

இதையடுத்து பயணிகள் பலரும் கீழே இறங்கி அருகிலிருந்த தண்டவாளத்தை கடக்க முற்பட் போது அந்த வழித்தடத்தில் அதிவேகமாக வந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ் இரயில் மோதியது. இதில் பயணிகள் பலரும் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுவரை 10 பயணிகள் உயிரிழந்துள்ளதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளன. இந்நிலையில் படுகாயம் அடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

**குறுக்கே வந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ்**

இந்த விபத்து பரண்டா ரயில் நிலையம் அருகில் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசாரும், அம்புல ன்ஸ்களும் மீட்பு பணியில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கும்பமேளா மோனாலிசா எங்கே?

## அலைமோதும் கூட்டத்தால் அதிருப்தி



12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பமேளாவை இந்து சமய மக்கள் கொண்டாடி வருகின்றனர். இம்முறை மகா கும்பமேளா ஜனவரி 13, 2025 முதல் பெப்ரவரி 26, 2025 வரை நடைபெறுகிறது.

இந்த விழாவில் சுமார் 45 கோடி பேர் கலந்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துறவிகளும், சாதுக்களும் முக்கியத்துவம் பெற்று விளங்கும் மகா கும்பமேளாவில் 16 வயது இளம்பெண் ஒருவர் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறார். அதுமட்டுமின்றி கடந்த சில நாட்களாக சமூக வலைதளங்களில் பேசுபொருளாகவும் மாறியுள் ளார். அவரது பெயர் மோனாலிசா போஸ்லே. பூக்கள், மற்றும் மணிகள் விற்பதற்காக அவர் கும்பமேளாவிற்கு வந்துள்ளார்.

**யார் இந்த மோனாலிசா?**

இவரை பலரும் "ப்ரவுன் பியூட்டி" என்று வர்ணிக்கின்றனர். இவருடைய கண்கள் மிகவும் வசீகரிக்கும் வகையில் இருப்பதாக ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். இவரது அழகை வர்ணித்து பலரும் சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இவ்வாறு பிரபலமடைந்துள்ள இளம் பெண்ணை கும்பமேளாவிற்கு செல்லும் பலரும் தேடி செல்ஃபி எடுக்க வருவதை கண்ட அவரது தந்தை, பயம் காரணமாக அங்கிருந்து வீட்டிற்கு செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக வலம் WORLD NEWS


பா. கிருஷிகா

# லொஸ் ஏஞ்சல்ஸில் மீண்டும் காட்டுத் தீ !




அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸுக்கு வடக்கில் புதன்கிழமை (22) பரவிய ஒரு புதிய காட்டுத்தீயானது 9,400 ஏக்கருக்கும் (38 சதுர கி.மீ.) அதிகமாக பரவியது. பலத்த காற்று மற்றும் உலர் மரங்களால் தூண்டப்பட்ட காட்டத்தீ 31,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அவர்களின் சொந்த இடங்களிலிருந்து வெளியேற கட்டாயப்படுத்தியது.

புதன்கிழமை காலை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் வடமேற்கே 45 மைல் தொலைவில், பல குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பாடசாலைகளை அண்மித்துள்ள மலைப் பகுதியில் உள்ள காஸ்டைக் ஏரிக்கு அருகில் தீ மூண்டது. எவ்வாறெனினும் இந்த தீப்பரவலினால் வீடுகள் அல்லது வணிகங்கள் எதுவும் சேதமடையவில்லை, மேலும் தீயை கட்டுக்குள் கொண்டு வருவது குறித்து தீயணைப்பு அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். சுமார் 31,000 பேர் கட்டாய வெளியேற்ற உத்தரவுகளின் கீழ் உள்ளனர் என தெரிவித் துள்ளது.





அதேநேரம், ஏஞ்சல்ஸ் தேசிய வனமானது சான் கப்ரியல் மலைகளில் உள்ள 700,000 ஏக்கர் (2,800-ச.கி.மீ) பூங்கா பார்வையாளர்களுக்கு மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிவப்பு எச்சரிக்கையின் விளைவாக, வேகமாக நகரும் தீயை எதிர்த்து போராடுவதற்காக தெற்கு கலிபோர்னியாவைச் சுற்றி சுமார் 1,100 தீயணைப்பு வீரர்கள் நிறுத்தப்பட்டதாக மாநில வனவியல் மற்றும் தீ பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. இது தவிர 4,000 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஹியூஸ் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி தீயணைப்புத் தலைவர் அன்ர மர்ரோன் தெரிவித்துள்ளார். இந்த மாத தொடக்கத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் பல சுற்றுப்புறங்களை அழித்த எரிந்து கொண்டிருக்கும் பெரிய காட்டுத்தீக்கு மத்தியில் இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

# பேரு நாட்டின் கத்தோலிக்கக் குழு பாப்பரசரால் கலைப்பு: வத்திக்கான் மௌனம்



ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பேரு நாட்டின் கத்தோலிக்கக் குழுவின் நிறுவுநர் தொடர்பான குற்றச்சாட்டுகள் உட்பட, அதன் சமூகத்தில் இருந்து துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள பேருவில் செல்வாக்கு மிக்க கத்தோலிக்க குழுவை கலைக்க பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மிகவும் அசாதாரணமான முடிவை எடுத்துள்ளார்.

ஒரு கட்டத்தில் தென் அமெரிக்கா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகளில் 20,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்த Sodalitium Christianae Vitae I கலைக்கும் முடிவு பற்றிய செய்தி குழுவின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டது, இருப்பினும் வத்திக்கான் இன்னும் அதிகாரப்பூர்வமாக கருத்து எதையும் தெரிவிக்கவோ அல்லது வெளியிடவோ இல்லை.

சோடாலிடியத்தை அடக்குவதற்கான முடிவு முதலில் ஸ்பானிஷ் மொழித்தளமான இன்ஃபோவாடிகானாவால், அந்த அறிக்கையில் உள்ள "மத்திய தகவல்கள் உண்மைதான், ஆனால் அவை என்ன என்பதைக் குறிப்பிடவில்லை என்றாலும் அதில் பல தவறுகள் உள்ளன" என தெரிவிக்கப்பட்டது.

ஒரு கத்தோலிக்க மத சமூகத்தை கலைக்க அல்லது அடக்குவதற்கான ஒரு பாப்பரசர் முடிவு அரிதானது. மற்றும் சோடாலிடியம் வழக்கில் குழுவை விசாரித்த சீர்திருத்த தேவாலய படிநிலையின் முயற்சிகள் மற்றும் 2023 வாடிகன் விசாரணையில் அதிகாரம் மற்றும் ஆன்மீகத்தின் துன்பமான துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்தியது. அதன் நிறுவுநர் லூயிஸ் பெர்னாண்டோ பிகாரி, 2017 ஆம் ஆண்டு சோடாலிடியம் உத்தரவிட்ட வெளிப்புற விசாரணையின்படி, கடுமையான நிதி முறைகேடு குற்றச்சாட்டுகளுடன் சேர்ந்து ஆட்சேர்ப்பு செய்தது கண்டறியப்பட்டது. தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் பிகாரி மறுத்துள்ளார்.

பேராயர் சார்லஸ் சிக்லுனா மற்றும் மான்சிக்னர் ஜோர்டி பெர்டோமியூ ஆகியோரால் நடத்தப்பட்ட வத்திக்கான் விசாரணைக்குப் பிறகு, ஓகஸ்ட் 2024 இல் திருத்தந்தையின் உத்தரவில் இருந்து பிகாரி வெளியேற்றப்பட்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு பாப்பரசர் அதன் முக்கிய உறுப்பினர்களில் மேலும் 10 பேரை வெளியேற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் சட்டப்பூர்வமாக்கப்பட்ட ஒரே பால்நிலை திருமணம் !

குயர் சமூகத்திற்கு (LGBTIQA+) அங்கீகாரம் அளிக்கும் வகையில், தாய்லாந்து ஒரே பால்நிலை திருமணத்தை அங்கீகரித்துள்ளது. மேலும், ஆண்,பெண் பால்நிலை தம்பதிகளுக்கு இருக்கும் அதே உரிமைகளை குயர் சமூகத்திற்கும் வழங்கும் சட்டம் வியாழன் (23) அன்று சட்டப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது.

ஒரே பால்நிலை திருமணத்தை சட்டப்பூர்வமாக்கிய முதல் தென்கிழக்கு ஆசிய நாடாகிய தாய்லாந்தில் நூற்றுக்கணக்கான தம்பதிகள் சட்டம் அமுலுக்கு வந்த முதல் நாளிலேயே திருமணம் செய்து கொண்டனர்.

தாய்லாந்து வரலாற்று சிறப்புமிக்க திருமண சமத்துவ சட்டமூலம் கடந்த ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்பட்டது. இது 2025 ஜனவரி 23 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

தாய்வான் மற்றும் நேபாளத்திற்குப் பின்னர், ஒரே பாலின திருமணத்தை சட்டப்பூர்வமாக்கிய தெற்காசிய நாடுகளில் முதல் இடத்தையும், ஆசியாவில் மூன்றாவது இடத்தையும் பிடித்த நாடாக தாய்லாந்து காணப்படுகிறது.



# கனேடிய சந்தையில் கார்களின் விலையை உயர்த்தும் டெஸ்லா




டெஸ்லா (Tesla) நிறுவனம் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் கனேடிய சந்தையில் கார்களின் விலையை உயர்த்துவதாக அறிவித்தது.

இது நுகர்வோரை கணிசமாக பாதிப்படைய செய்யும் அறிவிப்பாகும். குறிப்பாக டெஸ்லாவின் மொடல் 3 இற்கான விலைகள் 9,000 கனேடிய டொலர்கள் ($6,254.78) வரை அதிகரிக்கலாம். அதே நேரத்தில் மொடல் Y வகைகளின் விலைகள் 4,000 கனேடிய டொலர்கள் வரை உயரும். மொடல் S மற்றும் X இன் அனைத்து வகைகளும் 4,000 கனேடிய டொலர்களாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பில்லியனர் எலோன் மஸ்க் தலைமையிலான டெஸ்லா நிறுவனம் விலை உயர்வுக்கான காரணத்தை இதுவரை வெளியிடவில்லை. இந் நிறுவனம் கனடாவில் கார்களை உற்பத்தி செய்வதில்லை. பிற தொழிற்சாலைகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.

ஷாங்காய், சீனா தொழிற்சாலை மற்றும் அமெரிக்காவில் உள்ள அதன் ஆலைகளில் இருந்து கனடாவுக்கு எத்தனை கார்களை டெஸ்லா ஏற்றுமதி செய்கிறது என்பது உடனடியாக வெளிப்படுத்தப்படவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு பெப்ரவரி முதலாம் திகதி 25% வரி விதித்தால் அதற்கு பதிலளிக்க தயாராக இருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ செவ்வாயன்று (21) மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

# தென்கொரிய விமான நிலையத்தில் அகற்றப்படும் சுவர்



ஜெஜு விமான விபத்தில் 179 பேர் உயிலிழந்ததற்கு எதிரொலியாக முவான் சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்ட கொன்கிரீட் சுவரினை அகற்றுவதாக தென் கொரியாவின் போக்குவரத்து அமைச்சகம் புதன்கிழமை (22) தெரிவித்தது.

போயிங் 737-800 ரக விமானம் தாய்லாந்தில் இருந்து தென்மேற்கில் உள்ள முவானுக்கு டிசம்பர் 29 ஆம் திகதி 181 பயணிகள் மற்றும் பணியாளர்களுடன் பறந்து கொண்டிருந்தது. பின்னர், அது தென்கொரியாவின் முவான் விமான நிலையத்தில் தரையிறங்கிய போது ஓடுபாதையின் முடிவிலிருந்த கொன்கிரீட் தடுப்புச்சுவரில் மோதி தீப்பிடித்து விபத்துக்குள்ளானது. இந்த பேரழிவானது தென்கொரியாவில் இடம்பெற்ற மோசமான விமான விபத்தாக பதிவானது.

தென் கொரிய மற்றும் அமெரிக்க புலனாய்வாளர்கள் இன்னும் விபத்துக்கான காரணத்தை ஆராய்ந்து வருகின்றனர். இது நாடு முழுவதும் நினைவுச்சின்னங்களுடன் தேசிய துக்க தினத்தை அனுசரிக்க தூண்டியது.

விமானம் மோதிய கொன்கிரீட் தடுப்புச் சுவர், விமானங்கள் தரையிறங்குவதற்கு உதவும் வகையிலான ஓடுபாதையின் முடிவில் ஏன் இருந்தது என்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த நிலையில் தென்கொரிய போக்குவரத்து அமைச்சின் அறிக்கை வெளிவந்துள்ளது. அதில், முவான் சர்வதேச விமான நிலையம் ஏற்கனவே உள்ள கொன்கிரீட்டை முழுவதுமாக அகற்றி, ஒரு உடையக்கூடிய கட்டமைப்பில் உள்ளமைப்பினை மீண்டும் நிறுவ திட்டமிட்டுள்ளது. அதேநேரம், விமான நிலையங்களிலும் 240-மீட்டர் (787-அடி) நீளமான ஓடுபாதை பாதுகாப்புப் பகுதியை உறுதி செய்வதாகத் தெரிவித்தது. எனினும், முவான் விமான நிலையத்தில் உள்ள ஓடுபாதை பகுதி விபத்துக்கு முன் சுமார் 200 மீட்டர் நீளம் இருந்தது.

இதனிடையே, முவான் விமான நிலையம் புதுப்பிக்கப்பட்டபோது பதவியில் இருந்த அரசு நடத்தும் கொரியா விமான நிலையக் கழகத்தின் முன்னாள் தலைவரான சோன் சாங்-வான் செவ்வாயன்று (21) தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டதாக அந் நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, முவான் விமான நிலையத்தை மூடுவது ஏப்ரல் 18 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சகம் சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

# ஜேர்மனியில் கத்திக்குத்து; குழந்தை உட்பட இருவர் பலி



ஜேர்மனியின் பவாரியா மாநிலத்தில் அமைந்துள்ள அஷா பன்பர்க் நகரில் கத்திக்குத்து தாக்குதல் நடந்தது. இந்த திடீர் தாக்குதல் சம்பவத்தில் ஒரு குழந்தை மற்றும் ஒரு பெரியவர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் வெளியானது.

இச்சம்பவம் உள்ளூர் நேரப்படி காலை 11.45 மணிக்கு நடைபெற்றது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தாக்குதல் நடந்த இடத்தில் ஒருவரை கைதுசெய்த போலிஸார், வேறு யாருக்கும் இச்சம்பவத்தில் தொடர்பு உள்ளதா என விசாரணை நடத்தினர். இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். கத்திக்குத்து தாக்குதலில் குழந்தை உட்பட 2 பேர் பலியானது அங்கு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் முதல் முறையாக கோல்பேஸ் திறந்த வெளியரங்கில்



இலங்கை குத்துச்சண்டை வரலாற்றில் புதிய திருப்பு முனையாக தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷ் திறந்த வெளியரங்கில் வரலாற்றில் முதல் தடவையாக நடைபெறவுள்ளது. காலி முகத்திடலில் உள்ள வெளிப்புற குத்துச்சண்டை வளையத்தில் தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பை நடத்த இலங்கை குத்துச்சண்டை நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இது நாட்டின் குத்துச்சண்டை விளையாட்டுக்கு ஒரு புதிய திருப்பு முனையாக அமையவுள்ளது.

இலங்கை சுற்றுலா பணியகத்தின் ஒப்புதலின் கீழ் முப்படைகளும் இலங்கை பொலிஸாரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த ஆண்டுக்கான தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி 97ஆவது தடவையாகவும் நடைபெறவுள்ளது.

'ROAD TO LA28' என்ற தொனிப் பொருளின் கீழ் நடத்தப்படும் தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப், 2028 இல் அமெரிக்கா லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் அடுத்த ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதி பெற்று பதக்கம் வெல்லும் நோக்கத்துடன், இலங்கை குத்துச்சண்டை வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான முதன்மையான போட்டியாக அமையும். இந்த ஆண்டு தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்வார்கள், இது அதிக போட்டிக்கான வாய்ப்பை விரிவுபடுத்துகிறது, நூற்றுக்கும் மேற்பட்ட வலிமையான விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர். ஆசியக் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் 37 வருடங்களாகப் பதக்கம் பெற்றுக் கொள்வதாக வரலாற்றை மாற்றியமைத்து வெண்கலப் பதக்கம் வென்ற உமயங்க மிஹிரான் குறிப்பிடக் கூடியவராகக் கருதப்படுவார். மேலும், கடந்த கிளிப்போர்ட் கோப்பை மற்றும் சீஷெல்ஸ் சர்வதேச குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கங்களை வென்ற சுரங்க பெர்னாண்டோ மற்றும் ருக்மல் பிரசன்னா, கடந்த ஆண்டு தேசிய குத்துச்சண்டை சம்பியனான விமானப்படையின் இஷாரா தருஷி பெரேரா ஆகியோருடன் இணைந்து சிறப்பாகச் செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சீஷெல்ஸ் சர்வதேச குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கங்களை வென்ற மற்றொரு வலுவான வீரரான சிந்தன உதயகுமார, இளம் வீரரான யாஸ்மின் உசைத் மற்றும் லேடன் கோப்பை போட்டியில் சிறந்த த வீரராகச் செயற்பட்ட ஹசித ஜினதாச ஆகியோருடன் தேசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் இணைந்து கொள்ளவுள்ளனர்.




## இந்தியா – இங்கிலாந்து முதல் ரி20
# 07 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி

இந்திய–இங்கிலாந்துக்கிடையிலான முதல் ரி20 போட்டியில் இந்திய அணி 07 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

கொல்கத்தாவின் ஈடன் கார்டன் விளையாட்டுத் திடலில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ரி20 போட்டியில் இந்திய அணியின் கெப்டன் சூர்யகுமார் யாதவ் நாணய சுழற்சியில் வென்று பந்துவீச்சைத் தேர்வு செய்தார். இங்கிலாந்தின் முதல் தர துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

கெப்டன் ஜாஸ் பட்லர் மட்டுமே தனியாளாகப் போராடினார். அவர் 68 ஓட்டங்கள் பெற்ற நிலையில் வருண் சக்கரவர்த்தி பந்தில் ஆட்டமிழந்தார். இதனையடுத்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் இங்கிலாந்து அணி 132 ஓட்டங்கள் எடுத்தது.

வெற்றி இலக்கை நோக்கிச் சென்ற இந்திய அணியில் சஞ்சு சாம்சன் 26 ஓட்டங்களுக்கும் சூரியகுமார் யாதவ் ஓட்டமின்றி ஆட்டமிழந்தார்.

இன்னொருபுறம் சிக்ஸர் மழை பொழிந்த தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா 34 பந்துகளில் 8 சிக்ஸர்கள் 5 பவுண்டரிகளுடன் 79 அடித்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 12.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்திய வெற்றி பெற்றது.

அர்ஷ்தீப் சிங் ரி20யில் இந்தியாவுக்காக அதிக விக்கெட்டுகள் (97) எடுத்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக சஹால் 96 விக்கெட்டுகளுடன் முதலிடத்திலிருந்தது குறிப்பிடத்தக்கது.

### இங்கிலாந்தின் துடுப்பாட்டம்

பிலிப் சால்ட் – 0
பென் டக்கெட் – 4
ஜாஸ் பட்லர் – 68
ஹாரி புரூக் – 17
லியாம் லிவிங்ஸ்டன் – 0
ஜகோப் பெத்தேல் – 7
ஜேமி ஓவர்டன் – 2
கஸ் அட்கின்ஸன் – 2
ஜோப்ரா ஆர்ச்சர் – 12
ஆடில் ரஷித் – 8
மார்க் வுட் – 1

### இந்தியாவின் பந்து வீச்சு


வருண் சக்ரவர்த்தி 3, அர்ஷ்தீப் சிங், அக்ஷர் படேல், ஹார்திக் பாண்டியா தலா 2 விக்கெட்டுகள் எடுத்தனர்.





## கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின்
# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தினால் வருடாந்தம் மூன்றாவது தடவையாக நடாத்தப்படும் சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி 26 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை அங்கம்பிட்டிய விளையாட்டரங்கில் நாள் முழுவதும் நடைபெறவுள்ளது. கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அங்கத்தவர்களைக் கொண்ட 6 அணிகள் கலந்துகொள்ளும் இந்த மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியின் காலை 8.30 மணிக்கு ஆரம்ப வைபவம் பிரதமர் திருமதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அரசியல் கட்சித் தலைவர்கள், வீரர்கள், கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்க உறுப்பினர்களின் குடும்பத்தினர் உட்பட பெருந்தொகையான மக்களின் பங்கேற்புடன் இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.




# இலங்கை - அவுஸ்திரேலியா டெஸ்ட் ஒன்லைன் டிக்கெட் விற்பனை ஆரம்பம்

வோர்ன்–முரளி டெஸ்ட் தொடருக்கான டிக்கெட் விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை ஒன்லைனில் பெற்றுக் கொள்ளலாம் என்று இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் www.srilankacricket.lk. இணையதளத்தைப் பார்வையிட்டு டிக்கெட்டுகளை வாங்கலாம்.

இதற்கிடையில், 27 ஆம் திகதி தொடக்கம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கொழும்பு வித்யா மாவத்தை மற்றும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் உள்ள கவுண்டர்களில் டிக்கெட்டுகளை பெற்றுக் கொள்ளலாம்.

அத்தோடு நின்று பார்க்கும் பார்வையாளருக்கான டிக்கெட் 500 ரூபாவும், விளையாட்டு வளாகத்தின் கீழ் தளத்திற்கான டிக்கெட் 7500 ரூபாவும்,விளையாட்டு வளாகத்தின் மேல் தளம், கோல் சி.சி. தரை தளத்தில், வி.ஐ.பி. டிக்கெட்டுகள் 10,000 ரூபாய். கோல்,விளையாட்டு அரங்கின் மேல் தளத்திற்கான டிக்கெட்டின் விலை ரூ.12,500 ஆகும்.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை பெப்ரவரி 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

# தந்தைக்கு மோட்டார் சைக்கிள் பரிசளித்த இந்திய துடுப்பாட்ட வீரர்

கேஸ் சிலிண்டரை வீடு வீடாகச் சென்று விநியோகம் செய்து தனது கிரிக்கெட் வாழ்க்கைக்குப் பங்களிப்பு வழங்கிய தந்தைக்கு இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ரிங்கு சிங் மோட்டார் சைக்கிள் ஒன்றை பரிசளித்துள்ளார்.

5 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்புள்ள ஸ்போர்ட்ஸ் பைக்கையே பரிசாக அளித்துள்ளார். அந்த மோட்டார் சைக்கிளில் ரிங்கு சிங்கின் தந்தை செல்லும் காட்சி கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் விளையாடிய ரிங்கு சிங் தனது அதிரடியான துடுப்பாட்டத்தில் கிரிக்கெட் ரசிகர்கள் பலரையும் கவர்ந்தார். மிக எளிமையான பின்புலத்திலிருந்து வந்த இவர் கிரிக்கெட் மூலம் சாதனை படைத்திருப்பது பல இளைஞர்களுக்கும் படிப்பினையாக மாறியுள்ளது.

ஐ.பி.எல் போட்டிகளைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணியிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார். இதனால் 20 ஓவர் போட்டிகளுக்கான இந்திய அணியில் அவர் நிரந்தரமாக இடம்பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ரிங்கு சிங்கின் வெற்றிக்கு அவரது தந்தை கஞ்சந்த் சிங் முக்கிய பங்காற்றினார்.



இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 24ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.